www.janasakthi.in janasakthieditor@gmail.com janasakthi Tholaikatchi CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்




மலர் 88 | இதழ் 17 | 2025 ஜூலை 27 - ஆகஸ்ட் 02 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்துக்கு எதிர்ப்பு

# நாடாளுமன்ற வாயிலில் ‘இந்தியா’ கூட்டணி போராட்டம்



நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் ஜூலை 21 ஆம் தொடங்கியது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்தத்தின் பின்னணி, இந்திய வெளியுறவுக் கொள்கை மாற்றப்பட்டுள்ளதா? என்பது குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

தேர்தல் ஆணையம் பீகாரில் மேற்கொண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்திற்கும் (எஸ்ஐஆர்) எதிர்க்கட்சிகள் கடும் தெரிவித்தன. இதனால், நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நான்கு நாட்களாக ஒத்திவைக்கப்பட்டன.

இதனையடுத்து நாடாளுமன்ற வாயிலில் திரண்ட ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள், பீகாரில்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர், தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன் காலமானார்

# பொதுச் செயலாளர் டி.ராஜா அஞ்சலி

**இந்திய கம்யூனிச இயக்கத்தின் முதல் தலைமுறை தலைவர்களில் ஒருவரும் கேரள முன்னாள் முதலமைச்சருமான தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன் (வயது 101) ஜூலை 21 அன்று காலமானார். திருவனந்தபுரம் தர்பார் மண்டபத்தில் வைக்கப்பட்ட அவரது உடலுக்கு, லட்சக்கணக்கான மக்கள் திரண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.**



கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், எதிர்க்கட்சித் தலைவர் வி.டி.சதீசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, கேரள மாநிலச் செயலாளர் பினாயி விஸ்வம் மற்றும் அனைத்துக்கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

தோழர் வி.எஸ். அச்சுதானந்தனின் உடல், கேரள அரசு போக்குவரத்துக் கழகத்தின் அலங்கரிக்கப்பட்ட பேருந்தில் ஆலப்புழாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வழியெங்கும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு முழக்கமிட்டு அஞ்சலி செலுத்தினர். இதனையடுத்து ஜூலை 23 அன்று ஆலப்புழாவில் அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தோழர் வி.எஸ். அச்சுதானந்தன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச்



செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முன்னோடியும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி நிறுவனத் தலைவர்களில் ஒருவருமான தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன் (101) திருவனந்தபுரம் தனியார் மருத்துவமனையில் காலமானார் என்ற துயரச் செய்தி, ஆழ்ந்த வேதனையளிக்கிறது.

தற்போதுள்ள கேரள மாநிலத்தின் ஆழப்புழா மாவட்டத்தில் உள்ள புன்னபுராவில் 1923 அக்டோபர் 18 ஆம் தேதி பிறந்த தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன், சிறு வயதில் தேச விடுதலை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர். அவரது 18வது வயதில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்து, அமைப்பு பூர்வமாகச்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



**ஆகஸ்ட் 15, 16, 17, 18 சேலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது தமிழ்நாடு மாநில மாநாடு!**

# புலம்பெயர் தொழிலாளர்களுக்குச் சட்ட ரீதியான உரிமைகள் வழங்க வேண்டும்

## கோவை மாவட்ட மாநாடு வலியுறுத்தல்





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட 25 வது மாநாடு கடந்த ஜூலை 19, 20 ஆகிய தேதிகளில் பெரியநாயக்கன்பாளையம், வீரபாண்டி பிரிவில் உள்ள மீரா மகாலில் நடைபெற்றது.

கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் க.சந்தானம், எம்.ரவி மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்கள் உள்ளிட்டோரும் மாவட்ட முழுவதும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் என்.கிருஷ்ணன் ஏற்றிவைத்தார். மாநாட்டிற்கு மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எஸ்.இராதாகிருஷ்ணன், மு.வ.கல்யாணசுந்தரம், கே.சாந்தி சந்திரன் ஆகியோர் தலைமை தாங்கினார்.

மாநாட்டுப் பேரணி பெரியநாயக்கன் பாளையம் எல்.எம்.டபிள்யூ பிரிவிலிருந்து துவங்கியது. பயணியர் கல்லூரி அருகில் வந்து நிறைவுற்றது. அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, துணைச் செயலாளர்கள் ஜே.ஜேம்ஸ், மௌ.சேகர், பொருளாளர் சி.தங்கவேல் மற்றும் சிவகணேஷ், ஜெகநாதன் உள்ளிட்டோர் சிறப்புரை நிகழ்த்தினர். ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார்.

மாநாட்டில் 45 பேர்கள் கொண்ட புதிய மாவட்ட குழு தேர்வு செய்யப்பட்டது. சி.சிவசாமி மீண்டும் மாவட்டச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

கோவை தொழில் வர்த்தக மூலதன சக்திகள் இந்துத்துவச் சக்திகளை ஊக்குவித்து, வரம்பற்ற லாப வேட்டை களமாக மாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களுக்கான லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட மூலதன சக்திகளும், இந்துத்துவ சக்திகளும் பரஸ்பரம் தங்களது நோக்கங்களின் பொருட்டு ஒருங்கிணைகின்றனர்.

கோவை மாவட்ட மக்களின் ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும், அமைதிக்கும், பாதுகாப்பிற்கும், முற்போக்கான அரசியல் பாத்திரத்திற்கும், இந்துத்துவ சக்திகளின் நடவடிக்கைகள் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

அரசியல் பொருளாதாரம் மற்றும் பண்பாட்டுத் தளம் என அனைத்துத் தளங்களிலும் பிற்போக்குத்தனமான வகுப்புவாத சக்திகளுக்கு எதிராகப் போராடுவதற்கு முற்போக்கான அரசியல் மற்றும் வெகுஜன இயக்கங்களை ஒன்று திரட்டவும், வகுப்பு சக்திகளை முறியடிக்கவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது மாநாடு உறுதி ஏற்கிறது.

கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகள் மற்றும் நூற்பாலைகள் பெரும்பளவில் இயங்கி வருகின்றன. இவற்றில் தென் மாவட்டங்களைச் சேர்ந்த பெண்களும் புலம்பெயர் தொழிலாளர்களும் பெரும் அளவில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆலை நிர்வாகங்கள் ஆலை வளாகத்திற்குள்ளேயே தொழிலாளர்களைக் குடிஅமர்த்தி வேலை வாங்கி வருவது தொடர்ந்து நீடிக்கிறது. அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச கூலி கூட அவர்களுக்கு வழங்கப் படுவதில்லை. 10 மணி நேரம் 12 மணி நேரம் என்று அவர்கள் வேலை வாங்கப்படுகிறார்கள்.

ஆலை வளாகத்திற்கு உள்ளே தொழிலாளர்களை அடைத்து வைத்து வேலை வாங்கும் நிர்வாகங்களின் மீது அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரசு அறிவித்துள்ள குறைந்தபட்சச் சம்பளம் ஆலைத் தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பும், அவர்களுக்கான சட்ட ரீதியான உரிமைகளும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாநாடு கேட்டுக்கொள்கிறது. என்பவை உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# திருவள்ளூர் மாவட்ட 10வது மாநாடு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவள்ளூர் மாவட்ட 10வது மாநாடு செங்குன்றத்தில் 20.07.2025 அன்று பி.கலையரசன் கொடியேற்று நிகழ்ச்சியுடன் தொடங்கி, தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநாட்டின் தலைமைக் குழுவாக சி.மாரி, எம்.பார்த்திபன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட துணைச் செயலாளர் அருள் அஞ்சலித் தீர்மானம் முன்மொழியப்பட்டு மாவட்ட துணைச் செயலாளர் வி.சரவணன் வரவேற்புரையாற்றினார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் கே.சுப்பராயன் எம்.பி மாநாட்டைத் துவக்கி வைத்து அரசியல் விளக்கவுரை ஆற்றினார்.

மாவட்டச் செயலாளர் அறிக்கை தாக்கல் செய்து விவாதத்திற்குப் பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 23 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. புதிய நிர்வாகிகளாக கே.கஜேந்திரன் மாவட்டச் செயலாளராகவும், வி.சரவணன், அருள் மாவட்ட துணைச் செயலாளர்களாகவும், எஸ்.மயில்வாகனன் மாவட்டப் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

மேற்கண்ட 4 நிர்வாகிகளும் மாநில மாநாட்டுப் பிரதிநிதிகளாகவும் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவாக மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.இராதாகிருஷ்ணன் நிறைவுரை ஆற்றினார். வரவேற்பு கமிட்டி செயலாளர் ஆர்.சீனிவாசன் நன்றியுரை கூற மாநாடு நிறைவுபெற்றது. சோழவரம் புழல் ஒன்றியக் குழு அடங்கிய வரவேற்புக் குழு மாநாட்டுப் பணிகளைச் சிறப்பாகச் செய்து முடித்தது.



# திருப்பூர் மாநகர் மாவட்ட மாநாடு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாநகர் மாவட்ட 2வது மாநாடு, ஜூலை 13, 14 ஆகிய இரு தினங்கள் திருப்பூரில் நடைபெற்றது. திருப்பூர் ராயபுரம் ரவுண்டானாவில் கட்சியின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மாநகர துணை மேயர் ஆர்.பாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி, தேசியக் குழு உறுப்பினர் வகிதா நிஜாம், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, மூத்த தோழர் ஜி.காளியப்பன், மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். முன்னதாக துருவன் பாலா தலைமையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

14ஆம் தேதி பிரதிநிதிகள் மாநாட்டில் பி.ஆர்.நடராஜன், டி.சசிகலா, ஏ.ராஜேந்திரன் எம்.சி ஆகியோர் தலைமைக் குழுவாகத் தேர்வு செய்யப்பட்டனர். துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம் மாநாட்டுக் கொடியினை ஏற்றி வைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார் அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிந்தார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி மாநாட்டைத் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் அரசியல், அமைப்பு நிலை அறிக்கையை முன்வைத்தார். கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் வகிதா நிஜாம் இன்றைய அரசியல் நிலை குறித்து விளக்கிப் பேசினார்.

பின்னர் எஸ்.ரவிச்சந்திரன், பி.ஆர். நடராஜன், ஆர்.செந்தில்குமார், எஸ்.செல்வராஜ், காட்டே சி.ராமசாமி, ஏ.ராஜேந்திரன், ஆர்.வடிவேல், டி.சசிகலா, ஆர்.பாலசுப்ரமணியம், வி.எஸ்.சசிகுமார், என்.சேகர், எஸ்.விஜய், எம்.பி.சக்திவேல், ஆர்.தமிழ்ச்செல்வி, ஏ.ஜெகநாதன், சி.பழனிச்சாமி, ஆ.செந்தில்குமார், எம்.பஞ்சவர்ணம், என்.முத்துப்பாண்டி, பி.நடராஜ், ஜி.சங்கீதா, வி.பிருந்தா, எஸ்.நந்தகுமார் ஏ.அரவிந்தகுமார், எஸ்.ஆனந்தகுமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மற்றும் எ.பாரதி, கே.சமீம், கே.சுரேஷ் (எ) சுப்பிரமணியம் ஆகியோரும் பயிற்சி உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் மாவட்டச் செயலாளராக ஆர்.செந்தில்குமார், மாவட்டத் துணைச் செயலாளர்களாக ஆர்.வடிவேல், அ.செந்தில்குமார், பொருளாளராக டி.சசிகலா ஆகியோர் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி நிறைவுரை ஆற்றினார்.



**ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு எங்கே?**

**வாய்ச்சவடால் மோடியே பதவி ஒரு கேடா?**

கட்சிக் கடிதம்

# ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா



போர்க்குணமிக்க தோழர்களே!

**சேலம் மாநகரம் நோக்கி அணி திரள ஆயத்தமாய் இருப்பீர்கள்! கிளை கூடி எத்தனை பேர் போவது, எத்தகைய வாகனத்தில் பயணிப்பது, ஊரிலிருந்து எப்போது புறப்பட்டால் ஆகஸ்ட் 18 ஆம் நாள் சரியாகப் பேரணி புறப்படும் இடத்தை அடைந்திட முடியும் என மிகச் சரியாகக் கணக்கிட்டு அதற்கேற்பத் திட்டமிட்டுச் செயலாற்றுவீர்கள் என்கிற நம்பிக்கையுண்டு.**



பேரணிக்கான நாட்கள் தொலைவில் இல்லை. மிக நெருக்கமாக இருக்கின்றது. பின்னர் பார்த்துக் கொள்ளலாம், நாட்கள் இருக்கின்றன என்று அலட்சியம் கொள்ளாது, நமது அரசியல் கடமைகளை மிகச் சரியாக ஆற்றிட அனைத்து முன்முயற்சிகளையும் மேற்கொள்வீர்கள் அல்லது மேற்கொண்டிருப்பீர்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

இடையிடை பல வேலைகள் மட்டுமல்ல, சிலர் நம்மைச் சீண்டிப் பார்க்கின்றார்கள். சீண்டுவதன் நோக்கத்தை நாம் அறியாதவர்கள் அல்ல.

நம்மைக் காணோம் என்றார், தேய்ந்து விட்டதாகக் கூறினார், முகவரியே இல்லாமல் போய்விட்டதாகக் கூறினார். இவ்வாறு நம்மைச் சீண்டிப் பார்த்தவர் ஒரு வாரத்திற்குள்ளாக அந்தர் பல்டி அடித்து நமக்கு அழைப்பு விடுத்தார். சாதாரண அழைப்பு அல்ல, இரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்பதாகக் கூறினார்.

அவரது அழைப்பு நிராகரிக்கப்பட்டதால் ஆக்கிரமித்து ஆத்திரமுற்றார், ஆவேசப்பட்டார். இழிவான எதிர்ப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

இவையெல்லாம் ஒருபுறம் இருப்பின் கொள்கை பேசாதீர்கள் என்கிறார். மேற்கண்டவர் யார் என்பது உங்களுக்குத் தெரியும்.

அவர் முன்னாள் முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கட்சியின் பொதுச்செயலாளர் இப்படிப்பட்டவர் கொள்கை பேச வேண்டாம். கொள்கையை கைவிட்டு விட்டு என்னோடு வா என்கிறார்.

உலகில் கொள்கை பேச வேண்டாம் என்று சொல்லக்கூடிய ஒரே தலைவர் இவராகத்தான் இருப்பார் போலும்.

கொள்கை இல்லா கட்சி ஒன்றைத் தொடங்கி இவரைப் பொதுச் செயலாளராக ஆக்கி அழகு பார்க்கலாம்!

இவ்வாறு பேசுபவர் அரசியல் அறியாதவர் அல்ல, தெரியும், நன்றாகத் தெரியும். தெரிந்த காரணத்தால்தான் திடீரென்று கம்யூனிஸ்டுகள் மீது தாக்குதல் தொடர்ந்தார். இத்தாக்குதலையும் தெரிந்தேதான் மேற்கொள்கிறார். ஏன் திடீரென்று கம்யூனிஸ்டுகள் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும்? அதுதான் கெட்டிக்காரத்தனம்.

தான் பாஜகவோடு அணி சேர்ந்ததை நாம் கடுமையாக அரசியல் ரீதியாக விமர்சிக்கின்றோம். நாம் மட்டுமல்ல, அவரது கட்சித் தொண்டர்களே ஏற்பதாக இல்லை. அன்வர் ராஜா ஓர் உதாரணம்.

இவர் ஒன்றும் சாதாரணமானவர் அல்ல, ஜெயலலிதா அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர், நாடாளுமன்ற உறுப்பினராக, ராஜ்ஜிய சபை உறுப்பினராகப் பணியாற்றியவர்.

இவர் பாஜக கூட்டணியை எதிர்க்கின்றார். இவர் கூறும் காரணம் குறித்துக் கவனமாகப் பரிசீலிக்க வேண்டியவர்கள் அதிமுக தொண்டர்கள். அன்வர் ராஜா என்ன கூறுகின்றார்? பாஜக, அதிமுகவுடன் கூட்டணி வைப்பது அதிமுகவை அழிப்பதற்குத்தான் என்று கூறுகின்றார்.

மராட்டிய மாநில அனுபவம் அவரை அப்படிப் பேச வைக்கின்றது. மராட்டிய மாநிலத்தில் தேசியவாத காங்கிரஸ், சிவசேனாவின் நிலை என்ன?

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத்பவார் ஒன்றும் மிகச் சாதாரணமானவர் அல்ல. நேரு, சாஸ்திரி, இந்திரா காந்தி, மொரார்ஜி என அனைவரையும் பார்த்தவர். நீண்ட காலம் காங்கிரஸ் கட்சியில் பயணித்தவர். அரசியலில் பழுத்த பழமாவார்! அவரது கட்சியின் நிலை என்னவானது என்பது அறிந்துதான் அன்வர் ராஜா பேசுகின்றார்!

பாஜகவின் நோக்கமென்ன? திரு எடப்பாடியாரை தங்களுடன் இணைப்பதில், இணைத்ததில் அமித் ஷா சிரமப்படவில்லை. துரியோதனனை வீழ்த்த எங்கே அடித்தால் உயிர் போகும் என்பது கிருஷ்ணனுக்கு நன்றாகவே தெரியும். பீமனும் துரியோதனனும் நீண்ட நேரம் சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். கிருஷ்ணன் பீமனுக்குத் தொடையைத் தட்டி சைகை காண்பித்தான். புரிந்துகொண்ட பீமன் துரியோதனனின் தொடையில் ஓங்கி அடித்தான். ஐயோ என அலறி வீழ்ந்தான் துரியோதனன் என்பது மகாபாரதக் கதை.

மகாபாரத கதையினை நன்கு படித்துத் தேர்ந்தவர்கள் ஆர்எஸ்எஸ் காரர்கள் குறிப்பாக கிருஷ்ண பாத்திரத்தை பாத்திரமாகக் கருதாமல், பகவானாக ஏற்றுக் கொண்டவர்கள். பகவான் எத்தகைய சூழ்ச்சிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றவர் என்பதும் அவர்கள் நன்கு கற்று அறிந்தவர்கள்.

இதில் நன்கு பயிற்சி பெற்ற அமித்ஷா எடப்பாடியாரின் பலவீனம் என்ன என்பது அறிந்து அடித்தார். ஐயோவென சாய்ந்தார் எடப்பாடியார்!

தனது பலவீனத்தால் பலிகடாவாகிவிட்ட எடப்பாடியார் மக்கள் மத்தியிலும், தன் கட்சித் தொண்டர்களித்திலும் பதிலளிக்க முடியவில்லை. தான் மேற்கொண்ட தவறான அரசியலை நியாயப்படுத்த முடியவில்லை.

அதிமுக தொண்டர்களும், பொதுமக்களும் எடப்பாடியார் அரசியலை ஏற்காத நிலையில் பரிதவிப்பிற்கு உள்ளாகியுள்ளார். அதன் விளைவே அரசியல் பேச வேண்டாம், தத்துவம் பேச வேண்டாம் எனக் கூறி கம்யூனிஸ்டுகள் மீது தாக்குதல் தொடுக்கின்றார்.

கவனத்தைத் திசை திருப்புகின்றார். திசை மாறினால் தன் தவறை மூடி மறைத்து விட்டு, தான் நினைத்ததைச் சாதிக்கலாம் என்று கருதுகின்றார். அதன் விளைவே கம்யூனிஸ்ட் தாக்குதல் அதுவும் இழிவான தாக்குதல். அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாது என்று தன் தோல்வியை ஒப்புக்கொண்ட எடப்பாடியார்க்கு நன்றி!

எப்போதும் அரசியல்தான் வெற்றி பெறும். அரசியல் அடிப்படையில்தான் அணியும் உருவாகும்! அரசியலற்ற காரணத்தால் எடப்பாடியார் நினைத்தது போன்று தனது தலைமையில் பலம் பொருந்திய ஒரு அணியை உருவாக்க முடியவில்லை. அதன் வெளிப்பாடு கோபம், கொந்தளிப்பு, அதிருப்தி அனைத்தையும் வெளிப்படுத்தி வருகின்றார்.

இவர் ஒரு பக்கமெனில் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் அண்மையில் ஒரு செய்தியை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

75 வயதானவர்கள் பொறுப்புகளில் இருந்து விலகி மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இதற்கு முன்னுதாரணம் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி போன்றவர்கள். வயது மட்டும்தான் காரணமா? வேறு காரணங்கள் உண்டா?

வாகனம் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது, ஆண்டுகள் பலவாகிவிட்டன. அதன் பளபளப்பு மங்கிவிட்டது மட்டுமல்ல அடிக்கடி பழுதாகி விடுகின்றது. வாகனத்தை மாற்றிப் புது வாகனம் வாங்குவது இல்லையா?

அத்வானியை பிரதமர் வேட்பாளராக நிறுத்திப் பார்த்தார்கள் பலனில்லை, கழற்றிவிட்டார்கள். மோடியை அறிமுகப்படுத்தினார்கள். 2014, 2010இல் செல்லுபடியான மோடி 2024 ல் செல்லுபடியாகவில்லை. ஆகவே வண்டியை வாங்க ஆர்எஸ்எஸ் முடிவு எடுத்து விட்டதைத்தான் 75 வயதான அவ்வமைப்பின் தலைவர் தெரியப்படுத்தியுள்ளார்.

சென்ற சில வாரங்களுக்கு முன்பே மோடி விலக்கப்படுவார் என்று ஜனசக்தியில் வெளியிடப்பட்டதை வாசகர்கள் நன்கறிவார்கள்!

தற்போது துணைக்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



2022 க்குள் விவசாயிகளின் வருவாயை
இரட்டிப்பு ஆக்குவோம் என்றீர்களே!
700க்கும் மேற்பட்ட விவசாயிகளைச் சாகடித்தது ஏன்?

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 17

# ஆண்டவன் அல்ல, ஆள்பவன் காரணம்

“குறுக்கே ஆண்டவன் வந்து தடுக்காவிட்டால் 2027 வரை நான் பொறுப்பில் இருப்பேன்” என்று 13 நாட்களுக்கு முன்பு பேசிய ஜெகதீப் தன்கர், தனது குடியரசு துணைத் தலைவர் பதவியை ஜூலை 21 இரவு 9:30 மணிக்கு ராஜினாமா செய்து விட்டார்.

அன்றுதான் நாடாளுமன்றம் துவங்கியது. மாநிலங்களவைக்கு அவர் தலைமையேற்றார். மாலை அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தைக் கூட்டினார். பிஜேபி தலைவர் ஜே.பி.நட்டாவும் அமைச்சர் ரிஜுஜுவும் கூட்டத்திற்கு வரவில்லை.

இரவு ஏழு மணி வரை அவர் அலுவல் நிமித்தமாகப் பலருடன் பேசியிருக்கிறார். இரண்டரை மணி நேரத்தில் ராஜினாமா செய்யும் அளவுக்கு என்ன நிகழ்ந்தது?

நட்டா, ரிஜுஜு இருவருக்கும் உடல்நிலை நன்றாகத்தானே இருக்கிறது! ஏன் கூட்டத்துக்கு வரவில்லை?

ராஜினாமா கடிதத்தை குடியரசுத் தலைவர் மறுப்பின்றி ஏற்றுக் கொள்கிறார். பிரதமர் மோடி, லண்டனில் இருந்து “நாட்டுக்குப் பணியாற்ற அவருக்கு நிறைய வாய்ப்புகள் கிடைத்தன. உடல் நலம் தேறட்டும்” என்று அலட்சிய ட்வீட் போடுகிறார். விடை கொடுத்தல், நன்றி கூறுதல் எதுவுமில்லை.

அரசியல் சாசனப் பதவி வகிப்பவர், திடீரென ராஜினாமா என்றால், அதைக் கேள்வி கேட்க எதிர்க்கட்சிகளுக்கும், ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிமை இருக்கிறது.

ஏதோ அவர் மிகவும் உத்தமமானவர் என்பதால் இந்தக் கேள்வி எழவில்லை. அடாவடியாகச் செயல்பட்டவர். குளிர்கால கூட்டத்தொடரில் அவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரி எதிர்க்கட்சிகள் தீர்மானம் கொண்டு வந்தன.

குறிப்பாக, தமிழ்நாடு சட்டப்பேரவை நிறைவேற்றிய சட்டங்களுக்கு ஆளுநர் ஒப்புதல் தர மறுத்தது சரியல்ல; மூன்று மாத காலத்துக்குள் ஒப்புதல் தர வேண்டும் என, ஆளுநருக்கு மட்டுமல்ல, குடியரசு தலைவருக்கும் உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

கொந்தளித்தார் தன்கர். உச்ச நீதிமன்றம் ஜனநாயக சக்திகளுக்கு எதிராக அணு ஆயுத ஏவுகணை தொடுக்கிறது என்றார். நீதித்துறை ஜனாதிபதிக்கு உத்தரவிடுவதா? இது என்ன சூப்பர் நாடாளுமன்றமா? என்றெல்லாம் பேசினார்.

தீர்ப்புக்கு விரோதமாக, ஆளுநர் ஆர்.என்.ரவி பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் கூட்டத்தைக் கூட்டியபோது, அதைத் துவக்கி வைக்கப் பறந்து வந்த தன்கர், தமிழ்நாடு அரசு மீது வசைமாரி பொழிந்தார்.

பலமுறை அவர் உச்ச நீதிமன்றத்தைச் சாடி இருக்கிறார். அரசியல் சாசனத்தில் இருந்து மதச்சார்பின்மை, சோஷலிசம் ஆகியவற்றை நீக்க வேண்டும் என்றார். இதற்காக பாஜக அவரை வெளியேற்றாது. இவை ஆர்எஸ்எஸ்ஸின் கொள்கைகள்தான்.

நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் தீப்பற்றிக் கொண்ட போது, உள்ளே ஏராளமான ரூபாய் நோட்டுக் கட்டுகள் இருந்தன. அலகாபாத் நீதிபதி சேகர் குமார் யாதவ், விஸ்வ இந்து பரிஷத் கூட்டத்துக்குப் போய். “நான் ஆர்எஸ்எஸ்காரன்” என்று சொல்லி மதவெறியைக் கக்கினார்.

இருவர் மீதும் பதவிநீக்கத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் தந்துள்ளன. இவற்றை தன்கர் பெற்றுக் கொண்டார்.

இதனால்தான் பிஜேபிக்குக் கோபம் வந்து அவருக்கு அழுத்தம் தரப்பட்டது என்று சொல்கிறார்கள். ஆனாலும் வாக்கெடுப்பு நடத்த அவர் நேரம் எதையும் குறிக்கவில்லை.

உண்மையில் மக்களவையிலும் மாநிலங்களவையிலும், பீகாரில் வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் என்ற பெயரில், 52 லட்சம் வாக்காளர்களை நீக்கியது குறித்தும், மறைபொருளாகவே உள்ள பகல்காம் தாக்குதல் குறித்தும் விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரி போராடுகின்றன; இந்த நீதிபதிகளைப் பற்றி வாக்கெடுப்புக்காக அல்ல.

நாடாளுமன்றத்தை நடத்துவதற்கு ஒரு நிமிடத்திற்கு 2.50 லட்சம் ரூபாய் செலவாகிறது. இப்படிக் கூச்சல் போடுவது என்ன நியாயம்? வரி கொடுப்பவர்கள் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கலாமா என்று பாஜக, தனது ஊடக அடிமைகள் மூலம் குரல் எழுப்புகிறது.

எந்த நியாயமான கோரிக்கையையும் ஏற்காமல், நாடாளுமன்றத்தை ஒப்புக்கு நடத்த பாஜக முயற்சிப்பதை எதிர்த்துத்தான் எதிர்க்கட்சிகள் போராடுகின்றன. கடைசியில், மசோதாக்களை விவாதமே இல்லாமல் நிறைவேற்றிக் கொள்ளும் வஞ்சகத் தந்திரத்தை பாஜக நீண்ட காலமாகக் கையாளுகிறது.

நாட்டை நிர்வகிப்பதில், எதிர்க்கட்சிகளுக்கும் பங்கு உண்டு என்ற நாடாளுமன்ற ஜனநாயகத்தை பாஜக மறுக்கிறது.

ஒரு குடியரசுத் துணைத் தலைவருக்கே இதுதான் கதி என்றால், ஜனநாயகத்தின் நிலை என்ன என்பதே இன்றைய கேள்வி.

தன்கர் சொன்னபடி ‘ஆண்டவன்’ அல்ல, ஆள்பவன்தான் அவரது ராஜினாமாவுக்குக் காரணம்.

## எப்பகை வரினும் எதிர்கொள்வோம் வா!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

குடியரசுத் தலைவர் திடீர் ராஜினாமா? அவைகூடும் நாளில் திடீர் ராஜினாமா? உடல்நிலை காரணம் எனப் பொதுவெளியில் கூறப்பட்ட போதும் உண்மைதான் என்ன என்பது நாக்பூருக்கு மட்டுமே தெரியும்!

குருபீடத்தின் உத்தரவுகளை எவரும் மீறி விட முடியாது!

அடுத்தடுத்து சதிகளை உருவாக்கக்கூடிய இடம் நாக்பூராகும். அச்சதிகளை அரங்கேற்றுவதுதான் பாஜக தலைவர்களின் வேலையாகும்.

அதன் ஒரு பகுதிதான் அமித் ஷா எடப்பாடியை வளைத்துப் பிடித்துத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகும்!

சேராத இடங்களிலே சேர வேண்டாம் என்பது போய்ச் சேரக் கூடாத இடத்தில் சேர்ந்து, பின் விலகி, இனி சேரவே மாட்டேன், அப்படிச் சேருபவன் மனிதனே அல்ல என்று உணர்ச்சி பொங்கப் பேசிவிட்டு, தற்போது மீண்டும் ஏதோ ஒரு நெருக்கடி நிர்பந்தம் காரணமாகத் தன்னை பாஜகவுடன் இணைத்துக்கொண்ட பரிதாபத்திற்குரிய பழனிசாமிக்குத் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடத்தை மீண்டும் வழங்குவார்கள்!

தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்பதறிந்து, கம்யூனிஸ்டுகள் மீது வசைமாறிப் பொழிந்து தப்பிக்கலாமா என முயல்கின்றார். முயலுக்கு மூன்று கால் எனக் கூறும் சேலத்துக்காரருக்கு, நமது பதில் 3 கால் அல்ல நான்கு கால் என்ற உண்மையை உரக்கச் சொல்லிட, சேலம் வாரீர்!

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிமை பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா

என முண்டாசு கவிஞன் முழக்கத்தை ஏற்பாய்!

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா என சேலம் அழைக்கின்றது. சிலிர்த்து, சிங்கமென கர்ஜித்து வா!

நெஞ்சுறத்தோடு அணிவகுத்து வா!

எப்பகை வரினும் எதிர்கொள்ளத் தயார் என வா!

நமது பயணம் சுகமளிக்கும் பயணம் அல்ல

பஞ்சு மெத்தையில் பாதை அமைத்து பயணம் பயணம் அல்ல, கரடு முரடான பாதை, மேடு பள்ளம் நிறைந்திட்ட பாதை!

செங்குத்தான மலை மீது பிடிமானம் இன்றி ஏற முடியும். அதன் சிகரத்தை எட்ட முடியும் என நம்பிக்கையோடு அடிமேல் அடி எடுத்து வைத்து சாதனை படைக்கும் சாதனையாளர்கள் நிரம்பிய செம்படையின் அங்கமான தோழர்களே சேலத்தை நினைவில் கொள்வீர்!

சேலம் மட்டுமல்ல, ஆகஸ்ட் 18 என்பதும் அன்று மாலை 3 மணி என்பதும் நினைவில் கொள்வது முக்கியம். மிக முக்கியம் என்பதனை அறிவாய்!

முக்கடலும் சங்கமிக்கும் இடம் குமரி என்றால், எட்டு திசையில் இருந்தும் வரும் செந்நதிகள் அனைத்தும் சங்கமித்துச் சங்கநாதம் எழுப்பும் செங்கடல்தான் சேலம் மாநகர்!

சந்திப்போம்!
குடும்பம் குடும்பமாய் சந்திப்போம்.
ஆம் நம் குடும்ப விழா!
கம்யூனிஸ்ட் குடும்ப விழா!
தாத்தா – பாட்டி
அம்மா – அப்பா
அக்கா – தங்கை
அண்ணன் – தம்பி
கணவன் – மனைவி
எனக் குடும்பம் குடும்பமாய்க் குதூகலத்துடன் குவிவோம்!

ஆகஸ்ட் 15 முதல் 18 முடிய சேலம் மாநகர் நமக்கானது. அந்நகர் செங்கோட்டையாக அமையும்!

சேலத்தில் சந்திப்போம்! சிவப்புச் சட்டை, சிவப்புச் சேலையோடு சந்திப்போம்!

நம் குடும்ப விழாவில் நாம் பங்கேற்கவில்லை எனில், அது நம் வாழ்நாளில் ஏற்பட்ட பிழை என்பது நாம் அறியாத ஒன்றா தோழா!

சந்திப்போம் சங்கமிப்போம்
சங்கநாதம் எழுப்புவோம்
மீண்டும் சந்திப்போம்
வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## நாடாளுமன்ற வாயிலில் ‘இந்தியா’ கூட்டணி... முதல் பக்கத் தொடர்ச்சி

மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். “பீகாரில் மேற்கொள்ளப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் ஜனநாயகப் படுகொலை” என்ற பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதனிடையே ஜெகதீப் தன்கர், குடியரசுத் துணைத்தலைவர் பதவியில் இருந்து திடீரென விலகினார். ஜூலை 21ஆம் தேதி வழக்கம் போல மாநிலங்களவைப் பணிகளை மேற்கொண்ட ஜெகதீப் தன்கர், அன்றிரவு பதவி விலகுவதாக குடியரசுத் தலைவருக்கு பதவி விலகல் கடிதம் கொடுத்தார். அதில், உடல்நலக் காரணங்களுக்காக பதவி விலகல் முடிவை எடுத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். அவருடைய பதவி விலகலை குடியரசுத்தலைவர் திரவுபதி முர்முவும் ஏற்றுக் கொண்டார்.

ஜெகதீப் தன்கர் உடல்நலக் காரணங்களுக்காக பதவி விலகியதாக கூறினாலும், அவரது பதவி விலகலுக்கு ஆழமான காரணங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக, மோடி அரசின் அதிருப்தி மற்றும் மிரட்டல் காரணமாகவே அவர் பதவி விலகியதாக கூறப்படுகிறது.

–வ.மணிமாறன்

## பொதுச் செயலாளர் டி.ராஜா அஞ்சலி முதல் பக்கத் தொடர்ச்சி

செயல்படத் தொடங்கியவர்.

கட்சி தடைசெய்யப்பட்ட காலத்தில் தலைமறைவு கட்சியை வழிநடத்துவதிலும், காலனி ஆட்சிக் காலத்திலும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் கம்யூனிஸ்டுகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட, கொடிய அடக்குமுறையை எதிர் கொண்டவர். சிறை வாழ்க்கை சித்ரவதைகளைச் சந்தித்தவர். எந்த நிலையிலும் கொள்கை நிலையில் தளர்வில்லாது உறுதியாகச் செயல்பட்டவர்.

நாட்டின் விடுதலைக்குப் பிறகு, நடைபெற்ற ஜனநாயகத் தேர்தல் முறையில் 10 முறை போட்டியிட்டு, 7 முறை வெற்றி கண்டவர். 2006 முதல் 2011 வரை கேரள மாநில அரசின் முதலமைச்சர் பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றியவர். இவரது ஆட்சிக் காலத்தில் கொச்சி துறைமுகத்தில் புதிய முனையம் அமைத்தது, மெட்ரோ ரயில் திட்டம், கொல்லம் தொழில்நுட்பப் பூங்கா அமைத்தது, கண்ணூர் விமான நிலையம் போன்ற திட்டங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்தியக்கம்யூனிஸ்டுகட்சியின்தேசியக்குழுவில் இருந்து வந்த தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன், 1964ஆம் ஆண்டு 32 தோழர்களுடன் வெளியேறி இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்டு) உருவாக்கத்தில் பெரும் பங்களிப்பு செலுத்தியவர். 1980 முதல் 1992 ஆம் ஆண்டு வரை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் பொறுப்பில் பணியாற்றியவர். அரசியல் தலைமைக் குழு உறுப்பினராகவும் செயல்பட்டவர். கட்சிக்கு ஏராளமான இளைஞர்களை ஈர்த்து, வளர்த்தவர்.

வகுப்புவாத, மதவெறி, சாதிய சக்திகள் அரசியல் தளத்தில் பேரபாயமாக வளர்ந்துள்ள நிலையில், பிளவுவாத சக்திகளை எதிர்த்த போராட்டம் கூர்மையடைந்து வரும் நேரத்தில், பொது வாழ்வில் அனுபவச் செறிவுள்ள தலைவரை கேரள மாநில மக்கள் மட்டும் அல்ல, நாட்டின் ஒட்டு மொத்த மதச்சார்பற்ற, சமூக நல்லிணக்கம் பேணும் ஜனநாயகச் சக்திகள் இழந்து விட்டனர்.

தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு, செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், மார்க்சிஸ்டு கட்சித் தலைவர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# வங்க மொழி பேசுவோரின் வாக்குரிமை பறிப்பு!



த.லெனின்

**பாஜக ஆளும் மாநிலங்களில் வங்க மக்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி, அவர்களது வாக்குரிமையைப் பறித்தும் வருகின்றனர். தேசியக் குடிமக்கள் பதிவேட்டிற்கான (NRC) அறிவிப்புகள் செய்ததன் மூலம் அவர்களைத் தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்தும் வருகின்றது.**

வாக்காளர் பட்டியலில் இருந்து வங்காளிகளின் பெயர்களை நீக்க அறிவிப்புகளை தேர்தல் ஆணையம் மூலம் வெளியிட்டுள்ளனர். பாஜக ஆளும் மாநிலங்களில், வங்காளிகள் துன்புறுத்தப்பட்டுத் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டும், சிலரை பங்களாதேஷிகள் என்று முத்திரை குத்தி, திருப்பி அனுப்பியும் வருகின்றனர்.

## வாக்காளர்களை நீக்க புதிய வழி!

சமீபத்திய வாரங்களில், ஒடிசா, அசாம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா, டெல்லி, குஜராத், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட இந்திய மாநிலங்களில் ஒரு புதிய போக்கு உருவாகியுள்ளது. அங்கு வங்க மொழி பேசும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அவர்களில் பெரும்பாலோர் இந்தியக் குடிமக்கள், அவர்கள் மீது சோதனைகள் நடத்தப்பட்டு, முறையான விசாரணைகள் ஏதுமின்றி, தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர், செல்லுபடியாகும் இந்திய ஆவணங்களை அங்கீகரிக்க மறுப்பதுடன், சில சந்தர்ப்பங்களில், வலுக்கட்டாயமாக வங்கதேசத்திற்கு நாடு கடத்தப்பட்டும் உள்ளனர். “சட்டவிரோத வங்கதேசக் குடியேறிகள்” மீது கடும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்படும் போர்வையில் நிகழும் இந்தக் கொடுமையான நடவடிக்கைகள் சட்ட விரோதமானதாகும்.

## ஆதாரம் அற்ற ஆதார்!

பெரும் பொருட்செலவோடு நிறைவேற்றப்பட்ட ஆதார், ஆதாரம் அற்றதாக மாற்றப்பட்டு விட்டது. ஆனால் அந்த ஆதாரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் சாதிச் சான்றிதழ் பீகாரில் குடியுரிமைக்காக ஏற்கப்படுகிறது. ஆனால் அதுவும் இந்த மாநிலங்களில் வாழும் வங்காளிகளுக்கு இன்று மறுக்கப்படுகிறது.

இவர்கள் குடியுரிமைக்கான ஆவணங்களாகக் குடும்ப அட்டை, ஆதார், ஏன் தேர்தல் ஆணையமே கொடுத்த வாக்காளர் அடையாள அட்டை, சாதிச் சான்றிதழ் உட்பட எதுவும் செல்லாதாம். ஆனால் பாஸ்போர்ட் மட்டும் செல்லுமாம்!

## வாக்குரிமை பறிக்கவா தேர்தல் ஆணையம்?

பாஜக எஜமானர்களை வெற்றி பெறச் செய்ய வைக்கிற ஒன்றைத்தான் தேர்தல் ஆணையம் இப்போது திருட்டுத்தனமாகச் செய்து வருகிறது.

குடியுரிமை குறித்து இவர்கள் முடிவு எடுக்கிறார்கள். உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அந்த அதிகாரங்கள் இவர்களுக்கு எப்படி வந்தது? ஒருவேளை புதிதாக நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையர் ஏற்கெனவே அமித்ஷாவின் அரவணைப்பில் உள்துறையில் பணியாற்றியவர். இந்தத் திருப் பணிக்காகத்தான் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளாரா?

இப்போது பாஜக ஆளும் அனைத்து மாநிலங்களிலும் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள், அவர்களது நோக்கம் தெளிவாகிறது.

நெருக்கடி நிலை பிரகடனத்தின் போது கூட வாக்குரிமை பறிக்கப்படவில்லை. ஆனால் இன்று இந்த அறிவிக்கப்படாத நெருக்கடி கால பாசிச ஆட்சியில் வாக்குரிமையையும் சேர்த்துப் பறிக்கப்படுகிறது. அதுவும் இஸ்லாமியர்கள், மதச் சிறுபான்மையினர்கள் மீது வன்மம் திணிக்கப்படுகிறது. இப்போது மொழி சிறுபான்மையினர், தலித் மக்கள் மீதும் உக்கிரமான தாக்குதல் தொடுக்கப்படுகிறது. இதன்மூலம் ஜனநாயகத்தைச் சவப்பெட்டியில் அடைத்து அதன் கடைசி ஆணியையும் தேர்தல் ஆணையம் அடித்து வருகிறது.



## நீதிமன்றத்தின் கண்டனம்!

கல்கத்தா உயர் நீதிமன்றம் இதன் மீது ஆய்வுகளை மேற்கொண்டது. 2025 ஜூலை 17 அன்று, கல்கத்தா உயர் நீதிமன்றம், சட்டவிரோதமாக வங்காள தேசத்தவர்களை அடையாளம் காண கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட பரவலான, திடீர்ச் சோதனைகள் தொடர்பாக மத்திய அரசு மற்றும் மாநில அரசின் அதிகாரிகளுக்கு ஒரு கூர்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

நீதிபதிகள் தபபிரதா சக்ரவர்த்தி மற்றும் ரீட்டோப்ரோட்டோ குமார் மித்ரா ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச், இந்தத் திடீர் நாடு தழுவிய சோதனைகளுக்கான காரணங்கள் என்ன? அவை முன்கூட்டியே திட்டமிடப்பட்டதா? அவை எந்த உளவுத்துறை அறிக்கையின் அடிப்படையில் இருந்தன? என்று காட்டமான கேள்விகளை எழுப்பியது.

பிர்பூமைச் சேர்ந்த மூன்று பேர் கொண்ட குடும்பம் உட்பட, வங்காள மொழி பேசும் புலம்பெயர்ந்தோரை சட்டவிரோதமாக தடுத்து வைத்து, நாடு கடத்தியது தொடர்பான ஆள்கொணர்வு மனுக்களை விசாரித்த நீதிமன்றம், அத்தகைய நடவடிக்கைகள், மொழி அல்லது தோற்றத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டால், அது தவறான மற்றும் ஆபத்தான செயல் என்று கூறியுள்ளது.

## ஒடிசா

ஒடிசாவில் 2025 ஜூன் மற்றும் ஜூலை 15ம் தேதிக்கு இடையில், 447 வங்காள மொழி பேசும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அவர்களில் பெரும்பாலோர் கொத்தனார்கள், தினக் கூலித் தொழிலாளர்கள் ஆவர்.

அவர்கள் பிர்பும், முர்ஷிதாபாத் மற்றும் தெற்கு 24 பர்கானாஸ் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த தெரு வியாபாரிகள், குறிப்பாக ஜார்சுகுடா, குர்தா மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். தொடர்ச்சியான சட்ட, அரசியல் மற்றும் நிர்வாக அழுத்தங்களுக்குப் பிறகு குறைந்தது 403 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் சந்தேகத்திற்குரிய காரணங்கள் என்று சொல்லப்பட்டு 30க்கும் மேற்பட்டவர்கள் இன்றும் காவலில் உள்ளனர்.

பிரஜராஜ்நகர் அருகே அதிகாலை 1 மணிக்கு போலீசார் நடத்திய சோதனையின் போது பிர்பூமைச் சேர்ந்த 22 வயதான அஜிமுதீன் ஷேக் கைது செய்யப்பட்டார். இவரும் அத்தகைய புலம்பெயர்ந்தோரில் ஒருவர். “அவர்கள் எங்கள் தொலைபேசிகளைப் பறிமுதல் செய்தனர். நாங்கள் வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதாரைக் காட்டியபோது கூட, அது போதாது என்று அவர்கள் கூறினர்,” என்று நினைவு கூர்ந்தார். அவரது 18 வயது உறவினர் நிஜமுதீன் ஷேக்கிடம் பலமுறை விசாரணை நடத்தப்பட்டதாகவும், அவர்களின் தொலைபேசிகள் வங்கதேசத் தொடர்புகளுக்காக ஸ்கேன் செய்யப்பட்டதாகவும், கூடுதல் ஆவணங்களைச் சமர்ப்பித்து உள்ளூர் வாசிகளின் உத்தரவாதத்திற்குப் பின்னரே விடுவிக்கப்பட்டதாகவும் கூறினர்.

## சத்தீஸ்கர்

தடுப்புக்காவலில் இருந்து கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படுவது வரை சத்தீஸ்கரின் கோண்டகானில், மேற்கு வங்காளத்தின் கிருஷ்ணாநகரில் வசிக்கும் 9 வங்க மொழி பேசும் கொத்தனார்கள் ஜூலை 12 அன்று ஒரு பள்ளி கட்டுமான இடத்திலிருந்து கைது செய்யப்பட்டதாக தி இந்து செய்தி வெளியிட்டுள்ளது. செல்லுபடியாகும் ஆவணங்களை வைத்திருந்தும், சரிபார்க்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தப்பட்டும், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ளக் கூட மறுக்கப்பட்டு, பேருந்துகளில் ஏற்றி மேற்கு வங்கத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

சத்தீஸ்கர் காவல்துறை, உள்ளூர் அதிகாரிகளிடம் பதிவு செய்யத் தவறியதாகவும், இந்தியாவின் புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டமான பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS) இன் தடுப்புப் பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டதாகவும் கூறியது. இருப்பினும், சட்டப்படி, அவர்களுக்கு ஏன் ஒரு சட்ட ஆலோசகரை அணுக அனுமதி வழங்கப்படவில்லை? அவர்களின் தொலைபேசிகள் ஏன் பறிமுதல் செய்யப்பட்டன? குடும்பங்களுக்கு ஏன் தகவல் தெரிவிக்கப்படவில்லை? உள்நாட்டிலே அவர்கள் அகதியாக்கப்பட்டுள்ளார்கள். சத்தீஸ்கர் உயர் நீதிமன்றத்தில் இப்போது ஒரு ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மகாராஷ்டிரா:

மேற்கு வங்கத்தைச் சார்ந்த மதுவா என்ற பட்டியலினச் சமூகம் இப்போது குறிவைக்கப்பட்டுத் தாக்குதலுக்கு ஆளாகி வருகிறது. அவர்களது அடையாள அட்டைகள் புறக்கணிக்கப்பட்டன.

புனேவில், வங்காள வம்சாவளியைச் சேர்ந்த, மதச் சிறுபான்மையினர். தலித் மதுவா சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ஆவணமற்ற குடியேறிகள் என்ற சந்தேகத்தின் பேரில் மகாராஷ்டிரா காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அகில இந்திய மதுவா மகாசங்கத்திடமிருந்து ஆதார், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களை வழங்கிய போதிலும், கைதிகள் விடுவிக்கப்படவில்லை.

அதிர்ச்சியூட்டும் விதமாக, கைது செய்யப்பட்டவர்களில் குழந்தைகளும் அடங்குவர். பாஜக எம்.பி.யும் மத்திய அமைச்சருமான மதுவா சமூகத்தைச் சேர்ந்த சாந்தனு தாக்கூர், தனது சொந்தத் தொகுதி மக்கள் துன்புறுத்தப்பட்டபோது அமைதியாக இருந்தது இவர்கள் பாசிஸ்டுகள் என்பதை நிரூபித்துள்ளது.

## டெல்லி மற்றும் குருகிராம்:

டெல்லியில், இந்தியாடுடே செய்திவெளியிட்டுள்ளபடி, நூற்றுக்கணக்கான வங்க மொழிபேசும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வசிக்கும் ஒரு குடியேற்றமான வசந்த் குஞ்ச், ஜெய் ஹிந்த் காலனியில் சரியான ஆவணங்கள் இருந்தபோதிலும், அவர்கள் வெளியேற்றப்பட்டனர். அத்துடன் மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டன. காவல்துறையின் வழக்கமான துன்புறுத்தலுக்குத் தாங்கள் குறிவைக்கப்பட்டதாகக் குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில், குருகிராமில், அசாமில் இருந்து வந்த குறைந்தது 26 வங்காள மொழி பேசும் தொழிலாளர்கள் இரண்டு நாட்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இறுதியில் விடுவிக்கப்பட்ட போதிலும், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டைகள் நிராகரிக்கப்பட்டதாகவும், முஸ்லிம் தொழிலாளர்கள் மதரீதியாகக் குறிவைக்கப்பட்டதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

சட்டப்பூர்வ தீர்ப்பு இல்லாமல் அல்லது நீதிமன்றங்களை அணுகாமல், சுயவிவரத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் இந்த நாடுகடத்தல்கள், இந்திய அரசியலமைப்பின் பிரிவு 21 மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினைத் தெளிவாக மீறுவதாகும். இந்தியா ஒரு பன்முக ஜனநாயக நாடு என்று கருதப்படுகிது, வேற்றுமையில் ஒற்றுமையே இதற்கு அடித்தளம். ஆனால் இன்று நடைபெறும் நிகழ்வுகள் அதனை அடித்து விரட்டும் அடாவடித்தனத்தை அரங்கேற்றுகிறது.


வங்க மொழி பேசுபவர்களுக்குத் தானே இது என்று இன்று நாம் மௌனம் காத்தால் நாளை ஒவ்வொரு மொழி பேசுவோருக்கும் இதுவே தொடர்கதை ஆகிவிடும். ஆபத்தை உணர்ந்து அணி திரள்வோம்.

தொடர்புக்கு : 9444481703

**ஒவ்வொரு குடிமகனின் வங்கிக் கணக்கில் ரூபாய் 15 லட்சம் என்றீர்களே! 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் எங்கே அந்தப் பணம்?**

# எடப்பாடியாரின் கதைகள் எடுபடுமா?

# சிலந்தி வலைக்குள் சிக்கிய அதிமுக




**கூட்டணியும் எடப்பாடியும் என்று புராணக் கதையே எழுதிவிடலாம் போல. ஆனால், அந்தப் புராணம் எடப்பாடியாரே சொன்ன "சேக்கிழார் எழுதிய கம்ப ராமாயணமாக" இருப்பதுதான் பிரச்சனையே.**

கூட்டணி ஆட்சி என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன? நமக்குத் தெரிந்த தமிழில், ''கூட்டணிக் கட்சிகளும் ஆட்சியில் பங்கு எடுக்கும்'' என்பதுதான். இதைத்தான் அமித்ஷா நான்கு முறை சொன்னார். ஐந்தாவது முறை ''அமைச்சரவையில் பாஜக இடம்பெறும்'' என்று நேரடியாகவே சொல்லிவிட்டார். இதை நம்பி, ''வருங்கால துணை முதல்வர் அண்ணன் நயினார் நாகேந்திரன் அவர்களே!'' என்று பா.ஜ.க. வினர் வேறு அழைக்கத் தொடங்கிவிட்டனர்.

அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற பாஜக மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் இப்படி அழைத்து பா.ஜ.க. வினர் மகிழ்ந்திருக்கின்றனர். அந்தக் கூட்டத்தில் பாஜக மாநில அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் உள்ளிட்ட தலைவர்களும் இருந்திருக்கின்றனர்.

ஆனால், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடியார், தன்னுடைய தமிழில் கூட்டணி ஆட்சிக்கு வேறொரு அர்த்தத்தை கூறி வந்தார். பாஜக நிர்வாகிகளின் பேச்சுகளும், பாஜக, அதிமுக கட்சிகளின் குருநாதருமான அமித்ஷாவின் பேட்டியும் எடப்பாடியாரை பதற வைத்துவிட்டது.

திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற சாலைவலம் (ரோடு ஷோ) கூட்டத்தில் பேசிய எடப்பாடியார், "2026 சட்டப்பேரவைத் தேர்தலில் எங்களது கூட்டணி வெற்றி பெறும். அதிமுக பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்'' என்று வேறு அறிவித்துவிட்டார். இதோடு விடவில்லை. ''ஆட்சியில் பங்கு கொடுக்க நான் ஒன்றும் ஏமாளி அல்ல'' என்றும் எடப்பாடியார் பொங்கிவிட்டார்.



பாஜகவை எடப்பாடியார் இப்படி மிரட்டி இருக்கிறாரே! என்று தானே நினைக்கிறீங்க. ''அதெல்லாம்சும்மாங்க'' என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் புஷ்வானமாக்கி விட்டார், ''கூட்டணி ஆட்சி அமைக்க நாங்கள் ஏமாளி இல்லை என்று பேசியதில் உள்அர்த்தமோ, உள்நோக்கமோ கிடையாது என எடப்பாடி பழனிசாமி என்னிடம் போனில் பேசினார். அதிமுகவை பாஜக கபளீகரம் செய்துவிடும் என்ற விமர்சனத்திற்குப் பதிலாகத்தான் அப்படிப் பேசினார். தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நிச்சயம் அமையும்'' என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் ஒரே போடாகப் போட்டுவிட்டார்.

''ஆட்சியில் பங்கு கொடுக்க நான் ஒன்றும் ஏமாளி இல்லை'' என்ற தமிழ் வாக்கியத்திற்கு இப்படியொரு அர்த்தம் இருக்கிறதா? என்று தமிழ் மக்கள் கிறுகிறுத்து விட்டார்கள். தமிழ் அறிஞர்கள் எல்லாம் பழைய அகராதிகள், இலக்கண நூல்களை எடுத்து வைத்துக்கொண்டு ஆராய்ச்சி வேறு செய்கிறார்களாம்.

''எனது சம்மந்தி வீட்டில் ரெய்டு நடந்ததால்தான் பா.ஜ.க. வுடன் கூட்டணி வைத்தேன் என்று அமைச்சர் நேரு கூறுகிறார். எனது சம்மந்தி வீட்டில் ரெய்டு நடக்கவில்லை. உறவினர் வீட்டில் ரெய்டு நடந்தது. அதற்கும், எனக்கும் என்ன சம்பந்தம் உள்ளது?'' என்று திமுக கூட்டணியின் விமர்சனங்களை எடப்பாடியார் மறுத்துள்ளார்.

சொந்தக்காரங்க வீட்டில் ரெய்டு நடந்தது உண்மை. ஆனால் அதுக்காக நான் கூட்டணி வைக்கவில்லை, நம்புங்க என்கிறார் எடப்பாடியார்.

## அழைப்பை நிராகரித்த தவெக

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், ஒத்த கருத்துடைய கட்சிகள் கூட்டணிக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பு தவெகவிற்கும் நாம் தமிழர் கட்சிக்கும் பொருந்தும் என்றும் அவர் கூறி யிருந்தார். இதனை தவெக நிராகரித்துவிட்டது. தங்களின் முதலமைச்சர் வேட்பாளர் விஜய்தான் என்றும், கூட்டணி குறித்து யாரிடமும் பேச்சு நடத்தவில்லை என்றும் தவெக தெரிவித்துள்ளது.

அடுத்து, ''கட்சி நிர்வாகிகள், எம்.எல்.ஏ.க்கள் ஆதரவோடு நான் முதல்வரானேன். நான்கரை ஆண்டுகள் மக்களின் வளர்ச்சியை நினைத்து ஒவ்வொரு நாளும் ஆட்சி செய்தேன்'' என்று எடப்பாடியார் பேசியிருக்கிறார். தவழ்ந்து போய் சசிகலா அம்மையார் காலில் கும்பிட்டு பதவி வாங்கியதாகத்தானே சொன்னாங்க. அந்தக் காணொளியையும் தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் பார்த்தாங்க. இன்னும் மறக்கவில்லை.

''தவழ்ந்து போய் ஆட்சிக்கு வந்தாலும், பின்னர் எப்படி வளர்ந்திருக்கிறேன்னு பாருங்க'' என்று பேசியதை எடப்பாடியார் மறந்துவிட்டு, ''கட்சி நிர்வாகிகள், எம்எல்ஏக்கள் ஆதரவோடு நான் முதல்வரானேன்'' என்று கூறிவிட்டார்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்களின் பெரும் போராட்டம். குருவிகளைச் சுடுவதுபோல் காவல்துறை அவர்களை சுட்டுக்கொன்றது. அந்த இடத்திலேயே 13 பேர் துடிதுடித்துச் செத்தனர். அதையே ''தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்துகொண்டேன்'' என்று வாய் கூசாமல் சொன்ன அன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, ''மக்களின் வளர்ச்சியை நினைத்து ஒவ்வொரு நாளும் ஆட்சி செய்தேன்'' என்று சாலைவலம் கூட்டத்தில் பேசுகிறார். அதை தமிழ்நாட்டு மக்களும் நம்ப மாட்டார்கள்.

## காமெடி பீசான எடப்பாடியார்

"எடப்பாடி பழனிசாமி தன்னை செல்போனில் தொடர்புகொண்டு, 'கூட்டணி குறித்து நான் அந்த அர்த்தத்தில் பேசவில்லை' என்று கூறியதாக நயினார் நாகேந்திரன் தெரிவித்தார். அதனுடன் அந்தப் பிரச்சனை முடிந்துவிட்டதாக நான் கருதுகிறேன். இருப்பினும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாஜக யாரையும் ஏமாற்றும் கட்சி கிடையாது. அதேநேரத்தில் ஏமாறும் கட்சியும் அல்ல."

**''ஆட்சியில் பங்குகொடுக்க நாங்கள் ஏமாளிகள் அல்ல'' என்ற எடப்பாடி பழனிசாமியின் பேச்சு குறித்து பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறிய பதில்.**

இப்படி நகைச்சுவை நடிகராகி விட்டீர்களே எடப்பாடியாரே!

''பா.ஜ.க.வுக்கு ஆட்சியில் பங்கு தர நாங்கள் ஏமாளிகள் அல்ல'' என்று எடப்பாடி பழனிசாமி பேசினாரே, அந்தப் பேச்சுக்கு நமக்குத் தெரிந்த தமிழில், ''அமைச்சரவையில் பங்கு தர மாட்டோம். விருப்பம் இருந்தா இருங்க, இல்லைனா போங்க'' என்பதுதான் அர்த்தம். இதைத் தவிர வேறு அர்த்தம் இருந்தா யாராவது சொல்லுங்க.

எடப்பாடியார் இப்படிச் சொன்ன பிறகும், கூட்டணி பற்றிப் பேசுவது பாஜகவின் சுயமரியாதை தொடர்பானது. அதைப் பற்றி பாஜகவே கவலைப்படாத போது, நாம் எப்படிப் பேச முடியும்?

பிள்ளையாரைத் தூக்கிட்டுப் போயாச்சு. வேல் யாத்திரையும் நடத்தியாச்சு. முருக பக்தர் மாநாடு போட்டு, அரோகராவும் பாடியாச்சு. வள்ளுவருக்கு காவியும் அடிச்சாச்சு. ஆழ்வார் மண், அம்பாள் மண் என்றும் பேசியாச்சு. எதுவும் நடக்கல. சிக்கிய கட்சியை விட முடியுமா? அதிகாரத்தை அடைவதற்காக எதையும் செய்யலாம். மானமாவது? மரியாதையாவது?

அமித்ஷாவின் பேச்சைத் தொடர்ந்து பாமக, தேமுதிக, புதிய தமிழகம் கட்சிகளும் கூட்டணி அமைச்சரவை என்று குரல் கொடுக்கத் தொடங்கி விட்டன. இதனால் ஆத்திரமடைந்த எடப்பாடியார், கூட்டணி ஆட்சி என்பதற்கு தமிழில் இல்லாத விளக்கத்தை எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

பிரமாதமான கட்சி ஒன்று கூட்டணிக்கு வரப்போகிறது. 210 இடங்களில் அதிமுக வெற்றி பெற்று தனித்து ஆட்சி அமைக்கப் போகிறது. திமுக ஆட்சி மீது மக்கள் அதிருப்தியில் இருக்கின்றனர் என்று எடப்பாடியார் பேசி வருகிறார். இப்படியொரு எடுத்துரைப்பை (நேரேட்டிவ்) கட்டமைக்க முயற்சிக்கிறார்.

கூட்டணி ஆட்சி என்ற அமித்ஷாவின் கருத்தை அதிமுக ஏற்கிறதா? இல்லையா? என்பதை எடப்பாடியார் விளக்கினால் போதும். அனைத்தும் முடிந்துவிடும்.

ஆனால், அதிமுக கூட்டணியில் சேர எந்தக் கட்சியும் முன்வரவில்லை. மிரட்டிக் கூட்டணிக்குள் கொண்டுவந்த பாஜகவும், அதிமுகவை கபளீகரம் செய்துவிடும் என்று தொண்டர்களே அச்சத்தில் உள்ளனர். அறநிலையத்துறை பற்றிப் பேசியதில், சங்கியாக மாறிவிட்டார் எடப்பாடியார் என்று வாங்கிக் கட்டியதுதான் மிச்சம்.

சிலந்தி வலையில் சிக்கிய ஈ மீண்டது உண்டா? பாஜகவுடன் கூட்டு சேர்ந்த கட்சி(??) மீண்டிருக்கிறதா?

பாஜகவின் பாசிச அரசியலுக்குப் பலியாகும் கூட்டணிக் கட்சிகள், அமைப்பு ரீதியாகவும் வீழ்ச்சி அடைகின்றன. பா.ஜ.க.வுடன் கூட்டணி சேரும் கட்சிகள், அதன் பாசிச அரசியலுக்கு முதலில் பலியாகின்றன. தொடர்ந்து அந்தக் கட்சிகள் அமைப்பு ரீதியாகவும் வீழ்ச்சி அடைகின்றன. இதிலிருந்து அதிமுக மட்டும் விதிவிலக்காக இருக்க முடியாது. கோவில், கல்வி, அறநிலையத்துறை பற்றி எடப்பாடியார் பேசியதே இதற்கு சான்றாகும்.

– வ.மணிமாறன்

தொடர்புக்கு: 9500001224

**எங்கெங்கு காணினும் செங்கொடிகள்!**
**சேலத்தில் நடைபெறும் மாநில மாநாடு**
**வெற்றி பெறட்டும்! சிறக்கட்டும்!**



எம்.ரவி

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

# தடை செய்யப்பட்டதும் தடை நீக்கப்பட்டதும் 3

**1943 ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் தேதி முதல் ஜூன் மாதம் 1ஆம் தேதி வரை 10 நாட்கள் பம்பாயில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் அகில இந்திய மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் விவாதித்து எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இந்தியாவில் "பாசிச எதிர்ப்பு", "ஏகாதிபத்திய எதிர்ப்பு", "தேச பக்தி போராட்டம்" ஆகிய கடமைகளை நிறைவேற்றும் வகையில் கட்சி தனது செயல்பாட்டை அமைத்துக் கொண்டது.**

1945 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரண்டாம் தேதி இரண்டாவது உலக யுத்தம் முடிவுக்கு வந்தது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் செஞ்சேனையின் மாபெரும் வீரத்தாலும், சோவியத் மக்களின் அளப்பரிய தியாகத்தாலும் பாசிசம் வீழ்த்தப்பட்டது. உலகம் பாதுகாக்கப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது இருந்த தடை நீக்கப்பட்ட 1942 ஆம் ஆண்டு முதல் இந்தியா விடுதலை அடைந்த 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி வரை 5 ஆண்டுகள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்கள், செய்த தியாகங்கள் ஆகியவை குறித்த வீர வரலாற்றை தனி அத்தியாயமாகக் கூற வேண்டும், கூறுவோம்.

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் ஒன்றுபட்டு நின்ற மக்களை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சதியும், மதவாத வகுப்புவாத வெறியும் இந்தியா பாகிஸ்தான் என இரு நாடுகளாகப் பிளவுபடுத்தின.

சொல்லவொண்ணாத துன்ப துயரங்கள் நிகழ்ந்தன. ரத்தக்களரி ஏற்பட்டு 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒருவரையொருக்கு அடித்துக் கொண்டு மாண்டு போனார்கள். பல லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகினர். இத்தகைய துயரங்களுக்கு இடையே 1947 ஆகஸ்ட் 14ஆம் தேதி பாகிஸ்தானும் ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்தியாவும் விடுதலை அடைந்தன.

இந்தியாவின் முதல் பிரதமராக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பொறுப்பேற்றார். நேருவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும், பிற்போக்கு வலதுசாரி சக்திகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குமான சதிச் செயல்கள் அரங்கேறின. ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர்களும், மதவெறியர்களும் இந்தச் சதிச்செயலில் ஈடுபட்டனர். இந்தியாவே எங்களது தாய் நாடு, இங்கேயே நாங்கள் வாழ்வோம் என்று கூறிய இஸ்லாமியர்களை வெளியேற்ற வேண்டும் என இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். நேருவின் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர்.


### நேரு சர்க்காரைக் காப்பாற்றுவோம்:

மதவெறிக்கு எதிராக ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை நிலைநாட்ட உயிரையும் பணையம் வைத்துச் செயலாற்றிய மகாத்மா காந்திக்கும், பண்டிதர் நேருவுக்கும் ஆதரவாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி களமிறங்கியது.

நேரு சர்க்காரைக் காப்பாற்றுவோம் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைக் கட்டிக்காப்போம், மதவெறி சக்திகளை முறியடிப்போம் என்ற முழக்கத்துடன் நேரடியாகக் களத்தில் இறங்கி கம்யூனிஸ்ட் கட்சி செயலாற்றியது.

காந்தியின் அகிம்சைப் போராட்டம் வெற்றியடைந்தது. நேரு அரசாங்கத்தின் கரம் வலுவடைந்தது. மதவெறியர்கள் மற்றும் ஏகாதிபத்திய ஆதரவாளர்களின் சதிச் செயல்கள் முறியடிக்கப்பட்டன.

விரக்தியடைந்த மதவெறி கும்பல், நாதுராம் கோட்சேவின் மூலம் 1948 ஜனவரி 30ஆம் தேதி மகாத்மா காந்தியைச் சுட்டுக்கொன்று பழி தீர்த்துக் கொண்டது. மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்ட மகாத்மாவைக் கொன்றதால் இந்து மகாசபா, ஆர்.எஸ்.எஸ் அலுவலகங்கள் பொதுமக்களால் அடித்து நொறுக்கப்பட்டன. வகுப்புக் கலவரங்கள் முற்றிலும் நிறுத்தப்பட்டன.



### நேரு சர்க்காரை வீழ்த்துவோம்:

1948 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி முதல், மார்ச் மாதம் 6ஆம் தேதி வரை ஏழு நாட்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது அகில இந்திய மாநாடு கல்கத்தாவில் நடைபெற்றது.

தோழர் பி.டி.ரணதிவே தலைமையில் கட்சியின் கொள்கைத் திசைவழியில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. நேரு சர்க்காரைக் காப்பாற்றுவோம் என்று களமாடிய கம்யூனிஸ்ட் கட்சி, திடீரென்று தன் நிலையை மாற்றிக் கொண்டது.

1947 இல் பெற்ற சுதந்திரம் ஒரு போலிச் சுதந்திரம் என்றும், நேருவின் ஆட்சி முதலாளித்துவத்திற்கு ஆதரவான, ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவான ஆட்சி என்றும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடி ஆட்சி என்றும், காங்கிரஸ் கட்சியின் தலைமை பிரிட்டீஷாரின் சதிக் கூட்டாளி என்றும், காங்கிரஸ் ஒரு பிற்போக்குத்தனமான கட்சி என்றும் குறிப்பிட்டது. மேலும், தற்போது மக்களது உணர்வும், எதார்த்த நிலையும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியைத் தூக்கி எறியும் நிலையில் உள்ளன. எனவே, நேரு சர்க்காரை வீழ்த்துவோம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஆகவே, எல்லா முதலாளிகளையும், முதலாளித்துவத்தையும் முற்றாக ஒழித்துக் கட்ட வேண்டும். அதற்கான புரட்சி என்பது ஒரே கட்டமான புரட்சியே ஆகும். ஜனநாயகப் புரட்சியும், சோசலிசப் புரட்சியும் ஒன்றிணைந்த வகையில் ''மக்கள் ஜனநாயகப் புரட்சியை'' நடத்திடுவோம் என்றும், ''பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சியை அமைத்திடுவோம்'' என்றும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விட்டது.

தோழர் பி.டி.ரணதிவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுவரை கட்சிக்கு கலங்கரை விளக்காக இருந்து வழிகாட்டி வந்த தோழர் பி.சி ஜோசி தேசியக் குழு உறுப்பினருக்கான தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார். சாதாரண உறுப்பினரானார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த முடிவு, நேரு அரசாங்கத்திற்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. காங்கிரஸ் தலைமையில் நேருவுக்கு அடுத்ததாக இருந்த கம்யூனிச எதிர்ப்பாளரான சர்தார் வல்லபாய் படேல் அப்போது உள்துறை அமைச்சராக இருந்தார்.

கல்கத்தா மாநாட்டில் கலந்து கொண்டவர்களைக் கைது செய்யும் முயற்சியில் காங்கிரஸ் அரசாங்கம் ஈடுபட்டது. மாநாட்டிற்குப் பிரதிநிதிகளாகச் சென்ற தோழர்களின் உள்ளமும், உருவமும் மாறியது. முழுப் புரட்சி வீரர்களாக மாறினர். மாறு வேடங்களுடன், ஆயுதங்களுடனும் தலைமறைவாயினர்.

நேரு அரசாங்கம், 1948 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் தேதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதமான கட்சி என்று தடை செய்தது. கட்சி அலுவலகங்கள் பூட்டி சீல் வைக்கப்பட்டன. கட்சியின் பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன.

இந்தியாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்பட்டுவிட்டது என்று மேல்மட்ட தலைவர்கள் முதல் அடிமட்டத் தொண்டர்கள் வரை கருதினார்கள். கனவிலும், கற்பனையிலும் மிதந்தனர்.

### புரட்சிகரப் போராட்டங்களும் விளைவுகளும்

இந்தியாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சோசலிசத்தைப் படைப்பதற்காக,

1948 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ருசியப் புரட்சிப் பாதையையும்,

1950 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சீனப் புரட்சிப் பாதையையும்,

வழிகாட்டிகளாகக் கொண்ட புரட்சி இயக்கங்களை நடத்தியது. இதனால், ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். சதி வழக்குகள் போடப்பட்டன. கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்டுகள் வேட்டையாடப்பட்டனர். மிருகங்களைப் போல் அடித்துக் கொல்லப்பட்டனர், சுட்டுக் கொல்லப்பட்டனர், தூக்கிலிட்டும் கொல்லப்பட்டனர்.

சிறைச்சாலையை கம்யூனிஸ்டுகள் போராட்டக்களமாக மாற்றினால், வெளியில் உள்ள மக்கள் கிளர்ந்தெழுவார்கள், நமது புரட்சி கைக் கூடும் என்று கருதி சிறைக்குள்ளும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் காவல்துறையின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளால் சிறைக்குள்ளேயே சுட்டும், அடித்தும் கொல்லப்பட்டார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தலைமை தாங்கிய தலைவர்களின் சிந்தனையில் தோன்றிய தவறான கருத்துகளும், முடிவுகளும் இவ்வாறு துயரமான பெரும் விளைவுகளை உண்டாக்கின.

இடதுசாரி திரிபு போக்கும், அதி தீவிரப் போக்கும் கட்சியைக் கவ்விப் பிடித்துக் கொண்டன.

மாமேதை லெனின் குறிப்பிட்டதைப் போல சிறுபிள்ளைத்தனமான ''இளம் பிள்ளைக் கோளாறு'' கட்சிக்குள் பரவியது..

வீரம் விளைந்தது. ஆனால் கொடுந் துன்பமும், துயரங்களும் ஏற்பட்டன. பல ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட்கள் அநியாயமாக வீரமரணமடைந்தனர்.

தோழர் டாக்டர் ஜி.அதிகாரி அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல கட்சிக்குள் வெறுமையும், சீர்குலைவுகளும் மேலோங்கின. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முழுமையாக முடங்கிப் போகும் நிலை ஏற்பட்டது.

### கட்சியில் ஏற்பட்ட மாற்றமும், தடை நீக்கமும்:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைத் துவக்கிய தலைவர்களான தோழர்கள் எஸ்.ஏ.டாங்கே, எஸ்.வி.காட்டே ஆகியோரும் மற்றும் தோழர் அஜய்கோஷ் ஆகியோர் சிறைக்குள் இருந்தனர்.

சிறைக்குள் இருந்த இந்த மூன்று தோழர்களும் கம்யூனிஸ்ட் கட்சியை எப்படிக் காப்பாற்றுவது என்று சிந்தித்தார்கள். கூட்டாக ஒரு முடிவினை எடுத்தார்கள். இடதுசாரி தீவிரவாத, வரட்டுவாத சீரழிவிலிருந்து கட்சியை மீட்டு எடுப்பதற்கான திசைவழியைத் தீர்மானித்து ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள்.

மேலும், சர்வதேசக் கம்யூனிஸ்ட் அமைப்பின் ஆலோசனையைப் பெறுவதற்காக சோவியத் யூனியனுக்கு ஒரு தூதுக் குழு சென்றது. தோழர்கள்

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

**ஆட்சியில் அமர்ந்து அதிகாரம் செலுத்துவது மட்டும் அரசியல் அல்ல. அந்த அரசியல் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்.**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**

## தடை செய்யப்பட்டதும் தடை நீக்கப்பட்டதும்

7 ஆம் பக்க தொடர்ச்சி

எஸ்.ஏ.டாங்கே, அஜய் கோஷ், ராஜேஸ்வராவ், எம்.பசவபுன்னையா ஆகியோர் அடங்கிய அந்தக் குழு ஜோசப் ஸ்டாலின், மாலட்டோவ், மாலாங்கோவ், சூஸ்லோவ் ஆகியோரைச் சந்தித்தது.

இந்தச் சந்திப்பின்போது ஸ்டாலின் அவர்களால் வழிகாட்டப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் ‘‘ரஷ்யப் பாதையையும்’’, ‘‘சீனப் பாதையையும்’’, கைவிட்டு விட்டு இந்தியவுக்கான ‘‘ஜனநாயகப் புரட்சித் திட்டம்’’ வகுக்கப்பட்டது. 1951 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கல்கத்தாவில் ரகசியமாகக் கூடிய அகில இந்திய மாநாட்டில் அத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

### இந்தியப் பாதைக்கான திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

இந்தியாவில் ஆயுதப் போராட்டத்திற்கான எழுச்சிக் கட்டத்தை அடைந்து விட்டோம் என்பதும், நாட்டில் உள்நாட்டு யுத்தம் மூண்டு விட்டது என்பதும் அளவுக்கு மீறிய கற்பனையாகும்.

எனவே, இந்தத் தவறான முடிவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கைவிடுகிறது. மேலும், கட்சி அணிகள் இடதுசாரி திரிபுவாதப் போக்கில் இருந்தும் அதிதீவிரப் போக்கில் இருந்தும் விடுபட வேண்டும் எனவும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் உள்ள மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பாதிக்கப்பட்ட மக்களைத் திரட்டிப் போராட்டங்களை நடத்த வேண்டும் எனவும், புரட்சிகரமான முறையில் பல்வேறு போராட்டங்களை நடத்துவதுடன், வர்க்க வெகுமக்கள் அமைப்புகளையும், கட்சி அமைப்பையும் வலுவாகக் கட்ட வேண்டும்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டு, ஜனநாயக முறையில் நடைபெறும் ஒவ்வொரு தேர்தலிலும் போட்டியிட வேண்டும். அதன் மூலம் மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்கும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் கட்சி பாடுபட வேண்டும் என்ற அடிப்படையில் விரிவான கட்சியின் திட்ட அறிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டு மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது.

இதே வேளையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பழைய இந்தியக் குற்றவியல் சட்டப்பிரிவு 16 இன் படி தடை செய்யப்பட்டிருந்தது. அந்தச் சட்டத்தின்படி கம்யூனிஸ்ட்கள் மீதான வழக்குகள் பல நீதிமன்றங்களில் நடந்து கொண்டிருந்தன. அவை 1951 ஆம் ஆண்டில் நடைபெற்ற நீதிமன்ற விசாரணையின் போது, 1950ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டதால், பழைய சட்டப்பிரிவு 16இன் படி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீது விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு செல்லாது என்று உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கின.

மேலும், நேருவின் காங்கிரஸ் அரசாங்கமும் 1951 அக்டோபரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டு அறிக்கையை வெளியானதன் அடிப்படையில் கட்சியின் மீது இருந்த தடையை நீக்கியதோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சட்டபூர்வமாக அங்கீகரித்து, நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடவும் அனுமதித்து.

1951 ஆம் ஆண்டு டிசம்பரில் துவங்கி 1952 ஆம் ஆண்டு ஜனவரி வரை நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது.

தொடர்புக்கு: 9442736668





மே.து.ரா.

# கீழடி அறிக்கை அறிஞர்கள்

**கீழடி அகழ்வுகள் தந்த அதிர்வுகளிலிருந்து தமிழ்ப் பண்பாட்டுப் பகைவர்கள் இன்னும் மீளவில்லை என்பதையே அண்மைய நடப்புகள் தெளிவுபடுத்துகின்றன.**



படங்கள், வரைவுகள், தரவுகள், விவரங்கள், விளக்கங்கள், அகழ்வுப் பதிவுகள், ஆய்வக முடிவுகள் ஆகிய அனைத்தையும் இணைத்து, காலக் கணக்கீட்டுக் கருத்துக்களையும் சேர்த்துத் தரப்பட்ட கீழடி அகழ்வறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. குறிப்பாகச் சொல்வதென்றால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுதான் உண்மை.

982 பக்கங்கள் கொண்ட அறிக்கையினை, இந்திய ஒன்றியத் தொல்லியல் துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு வல்லுநர்கள் மதிப்பிட்டுச் சில கருத்துக்களை முன்மொழிந்திருக்கின்றனர்.

இந்த மதிப்பீடுகளுக்குக் கீழடியில் முதலிரண்டு கட்ட அகழ்வுகளையும் முழுமையாக மேற்கொண்ட அகழ்வர் அமர்நாத் ராமகிருட்டிணன் தனது விளக்கங்களைத் தெரிவித்துவிட்டார்.

ஆனால், இந்த விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பதையே கடந்த 21072025 அன்று நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பப்பட்ட வினாவுக்கு விடை அளித்த ஒன்றிய அமைச்சர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ஒன்றியத் தொல்லியல் துறை ஆய்வறிக்கைகளை மறுப்பதில்லை என்றும் தெளிவான கருத்துரைகளை இணைக்க விழைவதாகவும் கூறியதுடன், அகழ்வர் அமர்நாத்தின் அறிக்கை விவரங்கள் பல இல்லாமல்



இருப்பதாகவும் அமைச்சர் கூறியிருக்கிறார். அறிவியல் முறையிலான நடைமுறைகளைப் பின்பற்றிக் கீழடி அறிக்கை வெளியிடப்படும் என்று அவர் கூறியிருப்பது, அறிக்கை மறுப்பு என்ற நிலையினைக் காட்டிவிடுகிறது.

ஊரக வரைவு, உள்ளடக்க வரைவு, பிற வரைவுகள், படங்கள், திட்டம், மேடு பள்ளக் குறிப்புகள், அகழ்வு செய்யப்பட்ட குழியின் வரைவுகள், மண் அடுக்குகள், பிற வரைவுகள், எழுத்துக்களின் பதிவுகள், பண்பாட்டுக் காலங்களில் சீரமைப்பு போன்ற பல விவரங்கள் மீண்டும் அல்லது மேலும் வேண்டுமென ஒன்றிய அமைச்சர் பேசியிருக்கிறார்.

### கால எல்லைகளில் மாற்றமில்லை

ஏதாவது குறைபாடுகள் இருப்பின் திருத்தவும் அல்லது விவரங்கள் வேண்டியிருப்பின் வழங்கவும் அமர்நாத் தயங்கவில்லை. மறுப்பும் தெரிவிக்கவில்லை. கீழடி அறிக்கையினைச் செம்மைப்படுத்துவதற்குத் தடை ஏதும் இருப்பதாகவும் அவர் கருதவில்லை. பண்பாட்டுக் கட்டங்களுக்கு மாற்றுப்பெயர் தரவேண்டும் என்பதைக்கூட அவர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனால், அத்தகைய மாற்றத்தின் வழியாகக் கால எல்லைகளைத் திருத்துவதைத்தான் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அழ்வுகள் தொடர்பான காலக் கணக்குகளுக்கு உலகம் எங்கும் பின்பற்றக்கூடிய வழமைகளையும் வழிமுறைகளையும் நடைமுறைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றித்தான் கீழடி அறிக்கையில் காலப் பகுப்புகளை வரையறுத்திருப்பதாக அமர்நாத் கூறுவது பொருத்தமாகவே தெரிகிறது.

அகழ்வு செய்யப்பட்ட இடத்தின் தேர்வு, அந்த இடத்தின் சிறப்பு, அகழ்வு செய்த முறை, கிடைத்த பொருள்கள், குழியின் ஆழம், மண்ணடுக்குகள் என்பன போன்ற அகழ்வு தொடர்பான விவரங்களைத் தொகுத்துத் தருவதுதான் அகழ்வு அறிக்கை என்றாகிறது. கிடைத்த பொருள்களை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்துவதும் அந்த அறிக்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது.

மண் அடுக்குகளையும் ஒவ்வொரு அடுக்கிலும் கிடைத்த தரவுகளையும் அடிப்படையாக எடுத்துக்கொண்டு, அகழ்வுப் பணியை மேற்கொண்ட அகழ்வர் காலப் பகுப்பினை நிறுவுகிறார்.

### கரிம ஆய்வினைத் தடுத்த ஒன்றிய அரசு

கீழடியில் 102 குழிகளில் அகழ்வுகள் செய்யப்பட்டன. அவற்றில் கிடைத்த அனைத்தும் அகழ்வு அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுவிட்டன. கீழடித் தொல்லியல் மேட்டில் ஆறு மீட்டர் ஆழத்தில் பல்வேறு காலகட்டங்கள் சார்ந்த மண் அடுக்குகள் காணப்பட்டிருக்கின்றன. மேலும், இந்த அடுக்குகள் எப்படி இருந்தன, எவ்வளவு அடுக்குகள் இருந்தன என்பன போன்ற விவரங்கள் அனைத்தும் வரைபடங்களாக எழுதப்பட்டுள்ளன. இவையும் அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

கீழடியில் 2014–15, 2015–16 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட இரண்டு கட்ட அகழ்வுகளில் 7500க்கும் மேற்பட்ட பொருள்கள் கிடைத்துள்ளன. இவற்றில் 88 கரிமக்கூறுகள் இருந்துள்ளன. இவை அனைத்தும் காலக் கணக்கீட்டுக்காக ஆய்வகங்களுக்கு அனுப்பப்படவில்லை என்பதையும் நோக்கவேண்டும்.

23 கரிமங்கள் மட்டுமே அறிவியல் ஆய்வைக் கண்டிருக்கின்றன. 2017இல் இரண்டு, 2020இல் ஆறு என எட்டுக் கரிமங்களுக்கு மட்டும்தான் அறிவியல் ஆய்வு செய்ய ஒன்றிய அரசு ஒப்புதல் தந்துள்ளது. தமிழ்நாடு அரசு 10 கரிமக் கூறுகளுக்கான ஆய்வுக்கு உதவியுள்ளது.

கீழடி அகழ்வில் செங்கல் கட்டமைப்புகள் கொண்ட நகரப் பண்பாட்டின் எச்சங்கள் கிடைத்த விவரங்கள் வெளிப்பட்டவுடன், தமிழர்கள் புதிய புதையலைக் கண்ட பெருமைகளைப் பெற்றனர். ஆனால், சனாதனிகளுக்கு

**விடுதலை வேள்வியில் புடம் போட்டுப் பெ**

**பெற்ற சுதந்திரத்தைப் பேணி பாது**

# யை வெளியிடுங்கள்
# ர் முடிவெடுக்கட்டும்



இது உறுத்தலாகத் தெரிந்தது.

அதனால்தான், 2017 வரை காத்திருந்து இரண்டு கரிமங்களுக்கு மட்டுமே ஒப்புதல் தந்ததுடன், அடுத்து மூன்று ஆண்டுகள் கழித்து ஆறு பொருள்களுக்கு ஏற்பளித்தனர்.

அகழ்வில் கிடைத்த கரிமப் பொருள்கள் அனைத்தையும் அறிவியல் ஆய்வு செய்யவேண்டிய நிலை இல்லாமல் இருக்கலாம். ஆனால், இன்னும் சில கரிமங்கள் ஆய்வு செய்யப்பட்டிருந்தால், மேலும் பல தெளிவான கால வரையறைகள் கிடைத்திருக்கும்.

### தடை முயற்சிகள்

இங்கு, முழுமையாகவும் முறையாகவும் அறிவியல் ஆய்வு செய்ய ஒன்றியத் தொல்லியல் துறை முன்வரவில்லை என்பதை மறுக்க முடியாது. அடுத்தடுத்த நிகழ்வுகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

முதல்இரண்டுகட்ட அகழ்வுகளையடுத்து, 2017இல் அமர்நாத் அசாம் மாநிலத்துக்குப் பணி மாறுதல் என்ற பெயரில் அனுப்பப்பட்டு, கீழடி அகழ்வுகள் முடக்கப்பட்டன.

பின்னர், சிறீராம் என்ற அகழ்வரைக் கொண்டு மூன்றாம் கட்ட அகழ்வு நடத்தப்பட்டு, மேலும் தொடரத் தரவுகள் ஏதும் கிடைக்கவில்லை என்ற அறிவிப்போடு 2017 அக்டோபரில் கீழடி அகழ்வுகள் முற்றிலுமாக முடிக்கப்பட்டன.

அகழ்வுகளில் கிடைத்த கரிமப் பொருள்களைக் குறிப்பிட்ட காலத்துக்குள் அறிவியல் ஆய்வு செய்துவிடவேண்டும். ஆண்டுக் கணக்கில் காலம் கடந்தால், அந்த பொருள்களில் மாசுபட வாய்ப்பேற்பட்டுக் காலக் கணக்குகள் பிறழ்ந்துவிட வாய்ப்புகள் ஏற்படலாம். இதனை ஒன்றியத் தொல்லியல் துறையில் செல்வாக்குடன் செயல்பட்டு வரும் பாரதிய சனதாக் கட்சியின் ஆர்வலர்கள் அறிவார்கள். அதனால்தான், கீழடியில் கிடைத்த கரிமங்களைக் கொண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டிய அறிவியல் ஆய்வுகள் முழுமை பெறவில்லை.

சிந்துவெளி, அரப்பா போன்ற அகழ்வுகளில்போது கரிம வகை ஆய்வு நுட்பங்கள் அறிமுகமாகவில்லை. அதனால் காலப் பகுப்புகள் தடைபடவுமில்லை. மண் அடுக்குகள், கிடைத்த தரவுகள் போன்ற அனைத்தையும் பயன்படுத்திக்கொண்டு காலங்கள் நிறுவப்பட்டன. மேலும், வேறு இடங்களில்கிடைத்ததரவுகளுடன்ஒப்பிட்டும் கால முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றை ஆய்வுலகம் ஏற்றுக்கொண்டது.

உண்மை நிலை இப்படியிருக்க, அனைத்து மதிப்பீட்டு முறைமைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, வேறு வகையான அளவுகோலைத் தனியாகத் தமிழர் மேல் திணிக்க சனாதனிகள் முற்படுகின்றனர்.

கொற்கை, கொடுமணல், பொருந்தல் ஆகியவற்றின் தரவுகளும் கீழடியில் அடுத்தடுத்த கட்ட அகழ்வுகளோடு, மாங்காடு, கீழமண்டி, சிவக்களை, ஆதிச்சநல்லூர், மயிலாடும்பாறை போன்ற அகழ்வுகளின் முடிவுகளை எந்த ஆய்வாளரும் ஒப்பிட்டுப் பார்க்காமல் ஒதுங்கிச் சென்றுவிட முடியாது.

### உயிரூட்டப்படும் சரசுவதி

தற்போது சரசுவதி ஆறு மீண்டும் ஓடத் தொடங்கியுள்ளது.

ராசத்தான் மாநிலத்தில் கி.மு. 2500 ஆண்டளவில் இருந்த பண்பாடு வெளிப்பட்டிருப்பதாகவும் அங்கு வழிபாட்டுப் பொருள்களோடு 80க்கும் மேற்பட்ட தரவுகள் கிடைத்திருப்பதாகவும் ஒன்றியத் தொல்லியல் துறை அறிவித்துள்ளது. அறிவியல் ஆய்வுகளைப் பின்பற்றாமல் அவர்களாக எடுத்துக்கொண்ட கற்பனை முடிவுகள்தான் இப்பொழுது தரப்பட்டுள்ளன.

ஆனால், கீழடி குறித்த விரிவான, தெளிவான, உறுதியான, அறிவியல் முடிவுகளை ஏற்க ஒன்றியத் தொல்லியல் துறை மறுக்கிறது.



எந்த ஆய்வாளரும் தன் விருப்பப்படி எதையும் எழுதிவிட முடியாது. ஏனெனில் தவறான எடுத்துரைப்புகள் அவரது நம்பகத் தன்மையைக் குலைத்துவிடும் என்பது அவருக்குத் தெரியும்.

ஆய்வுகளை மதிப்பிடும்போது, ஆய்வாளர் கூறுகின்ற கருத்துக்களுக்கான தரவுகள் தரப்பட்டிருக்கின்றனவா என்றுதான் பார்க்கவேண்டும். தாங்களாகவே ஒரு முடிவினைக்கொடுத்து,இதைஏற்கவேண்டும் என்று கூறுவது மதிப்பீட்டாளர்களுக்கான முறையல்ல.

ஆரியருக்கு முன்னரே செழித்திருந்த தமிழர் பண்பாட்டுப் பெருமைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பார் என்பது எதிர்பார்த்ததுதான்.

ஆய்வுமுடிவுகளில்கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். ஆனால், மாறுபட்ட கருத்துக்களை மறைக்கும் எண்ணம் இருக்கக் கூடாது. கீழடி அறிக்கையினை ஒன்றிய அரசு முதலில் வெளியிடவேண்டும்.

ஒன்றல்ல, இரண்டல்ல ஓராயிரம் மதிப்பீட்டாளர்கள், ஆய்வாளர்கள் பார்வைக்கு அந்த அறிக்கை கிடைக்கட்டும்.

ஆய்வாளர்கள் முடிவுகளை மேற்கொள்ள வாய்ப்புகள் தரவேண்டும். இதுதான் நேர்மையாகும்.

**தொடர்புக்கு : 9444075561**

## ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மருத்துவப் படிப்பைக் கைவிடுக!

ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மருத்துவப் படிப்பைக் கொண்டு வருவதைக் கைவிடக் கோரி கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது.

“ஒரே தேசம் ஒரே மருத்துவ முறை (One Nation - One Health System)” என்ற பெயரில் நவீன அறிவியல் மருத்துவத்தை ஒழித்துக்கட்ட ஒன்றிய அரசு முயன்று வருகிறது.

நவீன அறிவியல் மருத்துவம் என்பது மனித குலம் வளர்த்தெடுத்த அறிவியலின் மணி மகுடமாகும். அதன் பரிணமிப்பு, வளர்ச்சி ஆகியவற்றில் ஒட்டு மொத்த மனிதச் சமூகமே பங்களித்துள்ளது.

இது உலகளாவிய அறிவியலாகும். எந்தத் தனிப்பட்ட சமூகத்திற்கோ, மனித இனங்களுக்கோ, பண்பாட்டிற்கோ, மொழிப்பிரிவனருக்கோ, மதத்தினருக்கோ, சொந்தமானதல்ல. இது உலக மக்களின் அளப்பரியப் பங்களிப்பாகும். ஆனால், பழமைவாத நோய்ப் பீடிப்பிற்கு உள்ளான ஒன்றிய ஆட்சியாளர்கள், நவீன அறிவியல் மருத்துவத்தை நமது பண்பாட்டிற்கு எதிரானதாக அந்நியமானதாக முத்திரை குத்த முயல்கின்றனர்.

நவீன அறிவியல் மருத்துவம் மேற்கத்திய மருத்துவம், கிறிஸ்தவ மருத்துவம், ஆங்கில மருத்துவம், காலனிய மருத்துவம் என்றெல்லாம் அடையாளப்படுத்த முயல்கின்றனர். மருத்துவத்தைப் பண்பாட்டுச் சிமிழுக்குள் அடைக்கின்ற முயற்சியை மேற்கொள்கின்றனர்.

எனவே நவீன அறிவியல் மருத்துவத்தின் மீது வெறுப்பைக் கக்குகின்றனர்.

ஒரே தேசம், ஒரே பண்பாடு என்ற பன்மைத்துவத்திற்கு எதிரான, இந்துப் பண்பாடு என்ற ஒற்றை அடையாளத்தை முன்னிறுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

இந்துப் பண்பாட்டின் ஒரு மருத்துவ முறையை அடையாளப்படுத்த விரும்புகின்றனர். அந்த அடிப்படையில் வேதகால மருத்துவ முறையையும் மூடநம்பிக்கைகளையும் பழமைவாதத்தையும் நவீன அறிவியல் மருத்துவத்தில் திணிக்க முயல்கின்றனர்.

ஆயுர்வேதாவிற்கு இந்துச் சாயத்தைப் பூச முயல்கின்றனர். உண்மையில் ஆயுர்வேதா வளர்ச்சியில் பௌத்தம், இஸ்லாம் மதங்கள் மட்டுமன்றி, மதச்சார்பற்றோரும் உழைக்கும் மக்களும் மகத்தான பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர்.

அவர்கள்தான் ஆயுர்வேதா மருத்துவ முறைகளைக் காத்தனர்.

சரகர்கள் என்ற நாடோடி மக்கள் பிரிவினர் ஆயுர்வேதா வளரக் காரணமாயினர்.

ரைனோ பிளாஸ்டி என்று சொல்லப்படும், வெட்டப்பட்ட மூக்கிற்குப் பதிலாக, புதிய மூக்கை ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை மூலம் உருவாக்கும் சுஷ்ருதரின் ஆயுர்வேத அறுவை சிகிச்சை முறையைக் காத்தனர்.

கண்புரை அறுவை சிகிச்சை முறைகளையும் உழைக்கும் மக்களே காத்தனர்.

ஆனால், உழைக்கும் மக்களால், கடும் அடக்குமுறைகளுக்கிடையே காக்கப்பட்ட, இந்த ஆயுர்வேத மருத்துவ முறை 1500 ஆண்டுகளுக்கும் மேலாக முடங்கிப் போவதற்கு, பிற்போக்கு ஆளும் வர்க்கமும், வைதீகமுமே காரணமாகின.

பல தடைகளை, அச்சுறுத்தல்களை, சமூகப் புறக்கணிப்புகளை, ஒடுக்குமுறைகளை, தீண்டாமைக் கொடுமைகளை மீறி உழைக்கும் மக்களால் காக்கப்பட்ட, வளர்க்கப்பட்ட ஆயுர்வேதாவை இன்று ஒரு குறிப்பிட்ட மதத்தோடும், ரிஷிகளோடும், முனிவர்களோடும், இந்துமதக் கடவுள்களோடும், இணைப்பது என்பது, இந்துத்துவ மதவெறி அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும். அடையாள அரசியலாகும்.

எனவே, பண்டைய ஆயுர்வேதா மருத்துவ முறையை இந்து மருத்துவ முறையாக அடையாளப்படுத்த ஒன்றிய அரசு முயல்கிறது. இதன் காரணமாக மருத்துவக் கல்வியில் பிற்போக்கான மாற்றங்களைக் கொண்டுவருகிறது.

அதன் அடிப்படையில், நவீன அறிவியல் மருத்துவப் படிப்பான MBBS உடன் BAMS என்ற ஆயுர்வேதா படிப்பை இணைத்து, ஓர் ஒருங்கிணைந்த மருத்துவப் படிப்பை (Integrated Medical Course), புதுவை ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் ஒன்றிய அரசு தொடங்க முயல்கிறது. இது கண்டனத்திற்குரியது. இம்முயற்சியைக் கைவிட வேண்டும்.

நவீன அறிவியல் மருத்துவத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில், அதனுடன், ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி, சித்தா போன்ற மருத்துவ முறைகளைக் கலந்து, ஒருங்கிணைந்த மருத்துவ (Integrated Medicine) முறையைக் கொண்டுவர ஒன்றிய அரசு முயல்வதைக் கைவிடவேண்டும்.


நவீன அறிவியல் மருத்துவத்தில், போலிமருத்துவம், சோதிடமருத்துவம், ஆன்மீக மருத்துவம், மூட நம்பிக்கைகள் போன்றவற்றை ஒன்றிய அரசு கலப்பதைக் கைவிட வேண்டும்.

மருத்துவத்தில் இந்துத்துவா, இந்தி, சமஸ்கிருதத் திணிப்பை ஒன்றிய அரசு மேற்கொள்வதைக் கைவிட வேண்டும்.

மருத்துவக் கல்வியில், அறிவியலுக்கு எதிராக ஏற்படுத்தும் பிற்போக்கு மாற்றங்களால், இந்திய மருத்துவர்களின் அறிவியல் சார் திறமைகள் (Scientific Talents) மீது உலக நாடுகள் வைத்துள்ள மதிப்பீட்டை ஒன்றிய அரசுத் தகர்ப்பதைக் கைவிட வேண்டும்.

போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, நவீன அறிவியல் மருத்துவத்தைக் காத்திட, மக்களுக்குத் தரமான இலவச நவீன அறிவியல் மருத்துவ வசதிகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும்.

சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கம், அரசு அனைத்து டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரிவுகள், அனைத்திந்திய முற்போக்குப் பேரவை இணைந்து சென்னையில் கருத்தரங்கை நடத்தின.



## ற்ற இந்தியச் சுதந்திரத்திற்குப் பேராபத்து!
## காப்போம்! சேலத்தில் கூடுவோம்.

# கம்யூனிஸ்ட் கட்சியில் ஜாக்கிசான்



மு.வீரபாண்டியன்

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர விருப்பம் தெரிவித்து, கட்சியில் இணைகிறார் உலகின் பிரபல திரைப்பட நடிகர் ஜாக்கிசான்.

இவரது இந்த அறிவிப்போடு, தனது வாழ்நாள் முழுவதும் நடித்துச் சேர்த்த பணத்தை ஏறத்தாழ 4 ஆயிரம் கோடி ஏழைகளுக்குத் தருவதாக அறிவித்துள்ளார்.

இரண்டு செய்திகளும் மிக ஆழமானவை. மிகச் செறிவான பொருள் கொண்டவை.

ஜாக்கிசான் ஹாங்காங் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். கட்டிட வேலை துவங்கி, திரைப்பட வேலைகள் என மேடுபள்ளங்களைக் கடந்தவர்.



உலகத் திரைப்படங்கள் இன்றுவரை ‘ஹாலிவுட்’ கைகளில்தான். இதனை முதன்முதலில் முறியடித்தது புரூஸ்லீ. இரண்டாவது ஜாக்கிசான். இருவருமே ஆசியப் பகுதி.

ஆக்சன் படங்களில் நகைச்சுவையைக் கலந்தால் திரைப்படம் வெற்றி பெறும் என்கிற புதிய உத்தியை ஜாக்கிசான் அறிமுகப்படுத்தினார். இந்த ஃபார்முலா வெற்றி பெற்றது.

அடுத்து திரைப்படக் கதாநாயகர்கள் சண்டைக்காட்சிகளில் ‘டூப்’ போடுவது வழக்கம். மாடியிலிருந்து குதிப்பது கதாநாயகர்கள் போல் படத்தில் பார்ப்போம். நிஜத்தில் அது வேறொரு நடிகர். அதற்குப் பெயர் டூப்.

இப்படி டூப் இல்லாமல், தானே குதித்து, தானே விழுந்து பலமுறை காயப்பட்டு, பலமுறை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர் ஜாக்கிசான். ஜாக்கிசான் தந்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியோடு முரண்பட்டவர். ஆனால் அவரது மகன் தனது நீண்ட நெடிய அனுபவத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர ஆர்வம் காட்டுகிறார்.

இது ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு மகிழ்ச்சியான செய்தி என்றாலும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்குக் கசப்பான செய்தி.

உலகம் கொண்டாடுகிற மிகப் பிரபலமான நடிகர் ஜாக்கிசான். உலகில் இவருக்குத்தான் அதிக அளவு ரசிகர்கள். இப்படிப்பட்ட மிக பிரபலமான மனிதர் ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்வது பேசுபொருளாகி, உரையாடல் தொடர்கிறது.

‘ஜாக்கிசான்’ ஏழை சீனாவைப் பார்த்தவர். தான் பிறந்த ஊர், தான் பயின்ற நாடகப் பள்ளி என அனைத்துமே, சுகாதார வசதியின்றி, கல்வி வசதியின்றி வீழ்ந்து கிடந்ததைப் பார்த்தவர். ஆனால் இன்றைய சீனா, வியப்பைத் தருகிறது. அதன் வளர்ச்சியை அமெரிக்க ஐரோப்பிய நாடுகளால் எட்ட முடியவில்லை. இப்படி சீனா வளர்வதற்கு சீனக் கம்யூனிஸ்டுகளின் திட்டமிடுதலும், மக்கள் உழைப்பும், அர்ப்பணிப்பும்தான் என்கிறார் ஜாக்கிசான்.

தனது மகன் போதை வழக்கில் பிடிபட்ட போது ஆட்சியாளர்களின் உதவியை அவர் நாடவில்லை. ஏன் என்று கேட்டபோது, தவறு செய்த கம்யூனிஸ்ட் தலைவர்களே சிறையில் இருக்கும் போது, என் மகன் சாதாரணம். சட்டப்படி, நீதிபடி, நடப்பது நல்லது என்றார்.

எவ்வளவு செல்வாக்கு படைத்தவரும் நீதியை வளைக்க முடியாது என்பதற்கு சீன நீதிமன்றங்கள் சாட்சி என அவர் கூறியது பலருக்குத் தெரியாது.

ஜாக்கிசான் ஹாலிவுட் நடிகர் என்பதால் அவரது வீடு, வங்கிக் கணக்கு, திரைப்படம் சம்பந்தப்பட்ட அலுவல் என யாவும் அமெரிக்காவில். இனி அவர் அமெரிக்க அரசின் தொல்லைகளைச் சந்திக்க வேண்டும்.

ஏற்கெனவே கம்யூனிஸ்ட் என்று முத்திரை குத்தப்பட்டு சார்லி சாப்ளின் அடக்குமுறைகளைச் சந்தித்தார். மார்டின் லூதர் கிங் அவரது வீட்டில் கம்யூனிஸ்ட் புத்தகங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறி, அவர் மீது வழக்குகூடப் பதிவு செய்யப்பட்டது.

வியட்நாம் போருக்குச் செல்ல முடியாது என வருத்தத்தோடு கூறினார் குத்துச்சண்டை வீரர் முகமது அலி. அவரையும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர் எனக் கூறிய அமெரிக்க அரசு பட்டம், பட்டயங்கள், விருதுகள் என அனைத்தையும் பறித்தது.

அதேபோல உலகக் கால்பந்தாட்ட வீரர் மரடோனா ‘சே’ டீ சர்ட் அணிந்ததால் விமான நிலையத்திலேயே சோதனை என்று பெயரில் அவமானப்படுத்தப்பட்டார்.

சோசியலிசம் கம்யூனிசம் என்ற மானுட விழுமியத்தில் நேர்எதிர் அமெரிக்கா. அமெரிக்காவோடுதான் கம்யூனிஸ்டர்களுக்குப் பகைமுரண். பகைமுடிக்கும் போர்ப்படையில் இன்னொரு வீரன் ஜாக்கிசான்!



◆ மதுரை போக்குவரத்து கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற ஏஐடியுசி தலைவர்கள் சி எம் ஜே ஜெயபால், முத்துராமலிங்கம் ஆகியோருக்கு பாராட்டு விழா மதுரையில் நடத்தப்பட்டது

# சிபிஐ மாநில மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்க வேண்டும்

## இளைஞர் பெருமன்ற மாநிலக் குழு அறைகூவல்





அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழு கூட்டம், ஈரோடு தெற்கு மாவட்ட அலுவலகம் எம்.கல்யாணசுந்தரம் இல்லத்தில், மாநிலத் தலைவர் இரா.தமிழ்பெருமாள் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் துணைச் செயலாளர் ஜி.சரவணன் கொடியேற்றி வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் அரசியல் விளக்க உரையாற்றினார்.

மாநிலச் செயலாளர் க.பாரதி நடைபெற்ற வேலைகள் குறித்தும், அமைப்பு நிலைப் பணிகள் குறித்தும் உரையாற்றினார்.

கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் வாழ்த்துரை வழங்கினார். கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர்கள் எம்.செல்வகுமார், லி.பகத்சிங், மாநிலத் துணைச் செயலாளர் எஸ்.தெய்வசிகாமணி, மாநிலப் பொருளாளர் க.காரல்மார்க்ஸ், மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பா.தினேஷ் உள்ளிட்ட மாநிலக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாடு சேலம் மாநகரில் ஆகஸ்ட் 15, 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெறும். மாநில மாநாட்டுப் பேரணியில், தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும், தமிழ்நாட்டு உரிமைகளையும் பாதுகாக்கவும், வேலையின்மைக்கு எதிராகவும், பாலியல் குற்றங்களுக்கு எதிராகவும், போதைப் பழக்கத்திற்கு எதிராகவும் போர் முழக்கம் எழுப்ப வேண்டும்.

### மாநிலப் பயிற்சி முகாம்

செப்டம்பர் முதல் வாரத்தில் முன்னணி ஊழியர்களுக்கான மாநில அளவிலான அரசியல், தத்துவப் பயிற்சி முகாமினை கோபிசெட்டிபாளையம் சி.எஸ்.அரங்கத்தில் ஐந்து நாட்கள் நடத்துவதெனவும், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்களை நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

### வேலையின்மைக்குத் தீர்வு காண்க

இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. வேலையின்மை விகிதம், ஒரே மாதத்தில் 8 சதவீதமாக உயர்ந்துள்ளது என்பது வேதனையளிக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து விட்டுக் கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலைக்காகக் காத்திருக்கும் அவலநிலை நிலவுகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிட மத்திய, மாநில அரசுகள், அரசு காலிப்பணியிடங்களை உடனே நிரப்புவதோடு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

இளைஞர்கள் சுயமாக சிறு, குறு தொழில் தொடங்குவதற்கு எந்தவித நிபந்தனையும் இன்றி மானியத்துடன் வட்டியில்லாத் தொழில் கடன் வழங்கவேண்டும்.

வேலையில்லாக் காலத்தில் வாழ்வூதியமாகக் குறைந்தபட்சம் ரூ.5000க்கும் மேல் படிப்புக்கேற்றார் போல் வழங்க வேண்டும்.

போதையில் தள்ளப்படும் இளைஞர்களைப் பாதுகாக்க போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை விரைவாகத் தடுத்திட வேண்டும்.

### சாதி ஆணவப்படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்ற வேண்டும்

2003 ஆம் ஆண்டு கண்ணகி முருகேசன் தொடங்கி, இளவரசன், கோகுல்ராஜ், சங்கர் என இன்று வரை சாதி ஆணவப் படுகொலைகள் தமிழகத்தில் தொடர்ச்சியாக நடந்தேறி வருகின்றன.

சாதிய ஆணவப் படுகொலைகளைத் தடுத்திட உடனடியாகத் தனிச்சட்டம் நிறைவேற்ற வேண்டுகிறோம்

### லாக்கப் படுகொலைக்கு முடிவு கட்டுக!

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுவோர் அடித்துக் கொல்லப்படும் கொடூரம் அவ்வப்போது நடந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக 25 பேர் காவல் விசாரணையில் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகில் உள்ள மடப்புரத்தில் கோயில் காவலாளி அஜித்குமார் (29) விசாரணைக்கு அழைத்துச் சென்று, அடித்துச் சித்திரவதை செய்ததில் கொல்லப்பட்டுள்ளார். நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய காவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறையால் சாதாரண வழக்குகளில் கைது செய்யப்பட்டு, புழல் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்ட 300க்கும் மேற்பட்ட விசாரணைக் குற்றவாளிகள் கைகளும், கால்களிலும் எலும்பு முறிந்த நிலையில் சென்றனர்.

காவல் துறையின் விசாரணை முறையை, மனித உரிமைகளை மீறாத வகையில் முற்றிலும் மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இதனை உணர்ந்து, மக்கள் நலன், பொதுப் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மையமாகக் கொண்டு காவல் துறையின் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வெளியேறு! வெளியேறு! மக்கள் விரோத, பாசிச, மதவெறி மோடி அரசே வெளியேறு!**

# சேலத்து சிங்கம் சோரகை அர்த்தனாரி வாத்தியார்



ப.பரமசிவம்

**இந்திய நாடு வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைபட்டிருந்த காலம். இந்திய நாட்டு விடுதலைக்கும் நிலபிரபுத்துவத்திற்கு எதிராகவும் உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கக் கோரியும் எண்ணற்ற வீரமிக்கப் போராட்டங்கள் நாடு முழுவதும் நடைபெற்று வந்த காலம். தாது வருஷப் பஞ்சம் வந்த காலகட்டம்.**

1944க்கு முன்னால் 12ஆண்டுகள் சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் பகுதிகளில் மழைப் பொழிவு இல்லை. சேலம் மாவட்டத்தில் காவிரி ஆறு ஓடுகிறது. ஆனால் சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு அதனால் எந்தப் பலனும் கிடையாது. மாவட்டம் முழுதும் வானம் பார்த்த பூமிதான்.

அதேநேரத்தில் சிறுகுறு விவசாயிகள்தான் 90 சதம். மழை பொழிந்தால் வாழ்க்கை. இல்லையேல் வறுமையில்தான் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். கைத்தொழில்களும் கிடையாது. மக்கள் வற்றிய நீர் நிலைகளின் ஓரத்தில் கிடைக்கும் கிழங்கு வகைகளையும், ரங்கூன் குருணை அரிசிகளையும், கீரை வகைகளையும், கெப்பைக் கிழங்கு வகைகளையும் வேக வைத்துச் சாப்பிட்ட காலம் பட்டினியால் மக்கள் செத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில் மேட்டூர்வட்டம் நங்கவள்ளி சோரகை கிராமங்களில் வாழ்ந்த சிறு குறு விவசாயிகள் வாழ வழித் தெரியாமல் தனக்குச் சோறு போடும் விவசாய நிலங்கள் அடமானம் வைத்து அதன் மூலம் காலத்தைத் தள்ளி வந்தார்கள். அதன் பிறகு அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா பகுதிகளுக்குக் குடும்பம் குடும்பமாகப் பிழைப்பைத் தேடிப் போனார்கள். அங்கு கல் உடைக்கும் வேலையிலும், பிற வேலைகளிலும் கொத்தடிமைகளாகப் பணிபுரிந்து தனது குடும்பங்களைக் காப்பாற்றி வந்தார்கள்.

விவசாயிகளின் வறுமையையும் அறியாமையையும் கல்லாமையையும் இல்லாமையையும் பயன்படுத்திக் கொண்ட சேலத்து செட்டியார்களும், நிலப்பிரபுக்களும், கந்து வட்டிக் காரர்களும், வட்டிக்கு வட்டி போட்டு விவசாயிகளின் நிலங்களை அபகரித்துக் கொண்டார்கள். அடியாட்களையும் போலீசையும் வைத்து விவசாயிகளை நில வெளியேற்றம் செய்து வந்தார்கள். ஆடு, மாடு, அண்டா, குண்டா, பண்ட பாத்திரங்களையும் ஜப்தி செய்தார்கள். பெண்களை மானபங்கப்படுத்தியும் விவசாயிகள் குழந்தைகள், முதியவர்களைச் சித்ரவதை செய்தும் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றினார்கள்.



சோரகை கிராமம் பெருமாகவுண்டனூரில் 10 ஏக்கர் நிலம் வைத்திருந்த பெருமாள் கவுண்டர் அய்த்தம்மாளுக்கு 3வது மகனாகப் பிறந்தவர் அர்த்தனாரி. அந்தச் சுற்று வட்டாரத்திலேயே உயர்நிலைப் பள்ளி வரை படித்தவர் இவர் ஒருவர்தான். அதே ஊரிலேயே ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அதனால் அவர் அர்த்தனாரி வாத்தியார் என்ற பெயரைப் பெற்றார்.

ஆசிரியராக இருந்த இடத்தில் சக ஆசிரியர் ஒருவர் இவருக்கு நண்பரானார். அவர் தந்தை பெரியாரை நேசிக்கக் கூடியவர். அவர் இவருக்கு கம்யூனிஸ்டு சிவப்புப் புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் சொல்லியிருக்கிறார். இவரும் அந்தப் புத்தகங்களைப் படித்து அதன் மீது பற்றுடையவராக மாறியுள்ளார்.

ஒருநாள் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கையில் அப்பொழுது சாலை வழிகள் கிடையாது. வயல்வரப்பின் மீது நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது அங்கு ஒரு விவசாயின் குடிசையிலிருந்து ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டுவந்து வெளியே வீசுகிறார்கள். அந்தக் குழந்தை வீச்சு வீச்சு என்று கத்திக் கொண்டிருந்தது. அமீனார், போலீஸ், அடியாட்கள், கடன் கொடுத்தவர்கள் நின்று கொண்டு அந்த விவசாயியை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்து வாத்தியார் “ஏன் இப்படி அடாவடி செய்கிறீர்கள், இது உங்களுக்கே அநியாயமாகத் தெரியவில்லையா” என்று கேட்டுள்ளார். அதற்கு அவர்கள் “டேய் வாத்தி ஒழுங்கா போய்விடு, இதுல நீ தலையிடாதே. கடன் கொடுத்தவன் திருப்பிக் கேட்பான்” என்று அவரையும் சேர்த்து வசை பாடியிருக்கிறார்கள். பள்ளிக்குச் சென்று அவர் அன்று முழுதும் காலையில் பார்த்த சம்பவம் மட்டுமே நினைவில் கண்முன் வந்துள்ளது. அன்று பாடமும் நடத்த முடியவில்லை. பெரியார் கட்சியைச் சார்ந்த தனது நண்பரிடம் நடந்த விபரத்தைக் கூறி மிகுந்த வேதனை அடைந்துள்ளார்.

அன்றே ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு வீட்டிற்குச் சென்றவர். அதன் பிறகு சேலம் சென்று கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளராக இருந்து கொண்டு சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவரும் தஞ்சை மக்களை நிமிர்ந்து நிற்க வைத்த பி.சீனிவாசராவ் அவர்களின் சகலையுமான தோழர் கே.செல்வராஜைச் சந்தித்து அவர் ஆலோசனைப்படி அந்தப் பகுதியில் விவசாயிகள் சங்கத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் உருவாக்கியுள்ளார். கடனில் மூழ்கிக் கிடக்கும் அந்த விவசாயிகளையும் மக்களையும் திரட்டி வட்டிக் கடைக்காரர்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்திருக்கிறார். கே.செல்வராஜ் ஆலோசனையின் பெயரில் அந்தப் பகுதியிலுள்ள இளைஞர்களைக் கொண்ட தொண்டர் படையை அமைக்கிறார்.

நிலப்பிரபுக்களும், வட்டிக் கடைக்காரர்களும் வெள்ளையர் ஆட்சியில் நடந்ததைப் போன்றே சுதந்திர இந்தியாவிலும் தனது அடியாட்கள் மூலமும் காவல்துறை மூலமும் அடாவடித்தனத்தில் இறங்கினார்கள். இதைக் கவனித்த அர்த்தனாரி வாத்தியார் வெளி மாநிலத்திற்குச் சென்றிருக்கிறவர்களை எல்லாம் உடனே ஊருக்குத் திரும்பி வரச்சொல்லி அழைப்பு விடுத்து 1948ம் ஆண்டு ஜூலை மாதம் 16ம் தேதி நிலத்தை இழந்த எல்லோரும் அவரவர் நிலத்தில் போய் உழுது பயிரிடுங்கள் என்று கூறி அனுப்பினார்.



பாதிக்கப்பட்ட விவசாயிகள் அவரவர் நிலத்தில் பயிர் செய்யத் தொடங்கினார்கள். இதை அறிந்த நிலப்பிரபுகளும் கந்து வடடிக்காரர்களும் காவல் துறையையும் அடியாட்களையும் பயன்படுத்தி விவசாயிகளைக் கொடூரமான ஆயுதங்கள் கொண்டு தாக்கினார்கள். அந்நேரத்தில் கவுண்டுகல் பயிற்சிக் கொடுத்துத் தயாராக வைத்திருந்த செந்தொண்டர் படை அர்த்தனாரி வாத்தியார் தலைமையில் எதிரிகளை கவுண்டுக் கல்லால் அடித்து நொறுக்கினார்கள். போலீசும் கூலிப்படையும் தாக்குப் பிடிக்க முடியாமல் ஓட்டம் பிடித்தார்கள். ஒரு போலீஸ் அதிகாரி மரத்தின் மறைவில் நின்றிருந்து துப்பாக்கியால் சுட்டுவிட்டான். அதில் குண்டடிபட்டு இறந்தவர்தான் சோரகை பெருமாள்.

செம்படையின் வீரத்தைக் கண்டு அஞ்சிய போலீசும் மாவட்ட நிர்வாகமும் ஒரு தந்திரத்தைக் கையாண்டார்கள். அதை அறிந்து கொள்ளாத அர்த்தனாரி வாத்தியார் மாவட்ட ஆட்சியர் உங்களை அழைக்கிறார் நிலப்பிரச்சனைகளைச் சமூகமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஒரு தூதுவன் மூலம் அழைப்பு வந்தது. அதை ஏற்றுக்கொண்டு ஓமலூர் சென்று அங்கு ஒரு மொட்டைமாடியில் தங்க வைக்கப்பட்டார். அங்கு காத்திருந்தார் வாத்தியார்.

மாவட்ட ஆட்சியர் வரவில்லை. துப்பாக்கி ஏந்திய போலீஸ் படைதான் வந்தது சுற்றி வளைத்தது. அதைப் பார்த்த அர்த்தனாரி வாத்தியார் மொட்டை மாடியிலிருந்து குதித்துத் தப்பிக்க முயற்சி செய்தார். கால் இடரி கீழே விழுந்தவரை போலீஸ் படைவந்து அமுக்கிப் பிடித்துக் கொண்டார்கள். சங்கிலியில் பிணைத்து இரண்டு பக்கமும் 4 பேர்கள்.

சிங்கம் போல் நடை போட்டுச் செல்வதை ஓமலூர் மக்கள் நின்று பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். அமைதியாகச் சென்றவர் காவலர்கள் ஏமாந்த நேரத்தில் சங்கிலியை தொவலையாக விட்டுச் சடாரென்று இழுத்து விடுகிறார். அந்த நான்கு காவலர்களும் முன்னாள் சென்ற அதிகாரிகளின் காலில் போய்விழுகிறார்கள்.

அதேநேரத்தில் அதிகாரிகள் அந்தக் காவலர்களை வசைமொழியால் திட்டுகிறார்கள். அந்தக் காவலர்களும் வெட்கித் தலைகுனிகிறார்கள். வேனில் வாத்தியாரை ஏற்றிக் கொண்டு போலீஸ் வண்டி விரைகிறது. தலைகுனிவு ஏற்பட்ட போலீஸ்காரர்கள் இவரைப் பார்த்து ஏண்டா எங்களை எல்லார் முன்னிலையிலும் கேவலப்படுத்திவிட்டல்ல. இப்ப என்ன செய்கிறோம் பார் என்று இவரைத் தாக்க முற்படுகிறார்கள்.

அப்பொழுது வாத்தியார் நர நர வென்று பல்லைக் கடித்துக் கொண்டு “நான் கம்யூனிஸ்ட்டுடா! எதற்கும் துணிந்தவன். உயிர் எங்களுக்குத் துச்சமடா! ஆனால் நீங்கள் பொண்டாட்டி புள்ளகுட்டிகளோடு வாழ்வீர்கள். நீங்கள் எத்தனை பேர்கள் வேண்டுமானாலும் என்னைத் தாக்குங்கள். என்னை யார் முதலில் தாக்குகிறானோ, அவன் குரல்வளையைக் கடித்துத் துப்பிவிடுவேன்.” என்று சவால் விட்டுள்ளார். அதைக் கேட்ட காவலர்கள் அவரைத் தாக்காமல் மௌனமாக இருந்துவிட்டார்கள்.

அந்த நிலமீட்சிப் போராட்டத்தில் பங்கெடுத்த நூற்றுக்கணக்கான தோழர்கள் மீது 108 பொய் வழக்குகள் போடப்பட்டன. பலர் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். போராட்டத்தின் வெற்றியாக அர்த்தனாரி வாத்தியார் தலைமையில் 3618 ஏக்கர் நிலங்களை மீட்டு 1200 க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. போராட்டம் வெற்றி பெற்றது. அப்படிப்பட்ட வீரம் செறிந்த மண் சேலம் சோரகை மண்.

சோரகை விவசாயிகள் போராட்டத்தைப் பார்த்து இந்தியாவே அதிர்ச்சி அடைந்தது. பாராளுமன்றத்தில் நேரு இந்தப் போராட்டத்தை விவரித்துள்ளார். மேற்கு வங்கத்தில் உள்ள சிறிய நக்சல் பாரி கிராமம் வரை எட்டியது. சேலம் சோரகைப் போராட்டம் குறித்து நக்சல்பாரி கிராமத்து கம்யூனிஸ்டுகள் கேள்விப்பட்டு சேலம் சோரகை கிராமம் வந்து கவண்டுதல் பயிற்சி எடுத்துச் சென்றார்கள்.


அப்படிப்பட்ட வீரம் செறிந்த சேலம் மண் 1977 தோழர் கே.வி.ஆர் இறப்புக்குப் பிறகு 1977 முதல் 1983 தன்னுடைய இறப்பு வரை சேலம் மாவட்டச் செயலாளராகப் பணிபுரிந்தார். மாவட்ட கட்சி அலுவலகத்தை விலைக்கி வாங்கி அந்தப் பழைய கட்டிடத்தைப் புதுசு போல் உருவாக்கி கேரள முதலமைச்சர் சி.அச்சுதமேனன் அவர்களை வரவழைத்து அவர் கையால் திறக்க வைத்தார். கேரள தோழர் என்.இ.பலராமன் எம்.பி அவர்களும் எம்.கல்யாண சுந்தரம், தா.பாண்டியன் போன்ற தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். காலம் நேரத்தைக் கணக்கில் கொண்டு அர்த்தனாரி வாத்தியார் 1977 முதல் 1983 வரை சேலம் மாவட்டச் செயலாளராக இருந்த காலகட்டத்தில் பல பெரிய சாதனைகளைச் செய்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாடு ஆகஸ்ட் 15, 16, 17, 18 தேதிகளில் சேலம் நேரு கலை அரங்கில் நடைபெறுகிறது. 18ம் தேதி மாபெரும் செம்படைப் பேரணி நடைபெரும் அணி அணியாக படைதிரண்டு வாரீர்! வாரீர்!.

செல்: 9442995040

மதச்சார்பின்மையைப் பாதுகாக்க
மதவெறி பாசிச பாஜக ஆட்சியை விரட்டி அடிக்க,
செஞ்சட்டையோடு அணிவகுப்போம்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கர்மவீரர் காமராஜர் பிறந்தநாள் விழா



கல்விக்கண் திறந்த காமராஜரின் 123வது பிறந்தநாள் விழா கல்வி வளர்ச்சி நாளாக தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.

◆ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்டச் செயலாளர் செந்தில்குமார் தலைமையில், விருதுநகரில் உள்ள அவரது இல்லத்தில், காமராஜரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றியச் செயலாளர் சக்கணன், நகரச் செயலாளர் பாண்டியன், நகரத் துணைச் செயலாளர் மாரியப்பன், மாதர் சங்க மாவட்ட தலைவர் மாரீஸ்வரி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலக் குழு உறுப்பினர் முருகேசன், உறுப்பினர் லட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு கர்மவீரர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

◆ திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 23ல் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி உறையூர் கிழக்கில் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. போட்டியில் பங்கேற்றவர்களுக்குப் புத்தகப் பைகளை மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ்குமார் வழங்கி உரையாற்றினார். பள்ளியின் தலைமை ஆசிரியை பொறுப்பு ம.செசிலி வரவேற்புரை ஆற்றினார். மழலையர் வகுப்பு ஆசிரியை ஆர்.தாரணி நன்றி கூறினார். ஆசிரியர்கள் லதா, சந்தானலட்சுமி உள்ளிட்டோர் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தனர்.

## ஏஐடியுசி ஆட்டோ தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்வு



அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் நகரம் ஏஐடியுசி ஆட்டோ தொழிலாளர் சங்க மகாசபைக் கூட்டம் நடைபெற்றது.

ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் டி.தண்டபாணி கலந்து கொண்டு, ஆட்டோ ஓட்டும் தொழிலாளர்களுக்கு உள்ள நெருக்கடிகள் பற்றிக் குறிப்பிட்டார்.

செயல்பட்டு வரும் சங்க நிர்வாகிகளான தலைவராக த.கோமல்ராஜ், செயலாளராக கே.முருகேசன், துணைத் தலைவராக டி.ராஜராஜன், துணைச் செயலாளராக ஆர்.செல்வக்குமார், பொருளாளராக கே.செந்தில்குமார் ஆகியோர்களைத் தொடர்ந்து பொறுப்பிலிருந்து செயல்படுவது என ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. விரைவில் மாநில நிர்வாகிகளை அழைத்து மாவட்ட அளவில் விரிவடைந்த பேரவைக் கூட்டம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## தெலங்கானா இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர் சந்து நாயக் படுகொலை

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தெலங்கானா மாநில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினராக மக்கள் பணி ஆற்றி வருபவர் தோழர். சந்து நாயக். இவரது பகுதிக்கு அருகே அமைந்துள்ளது குந்துலூர் கிராமம். இங்கு ஏழை மக்களுக்காக 100 ஏக்கர் நிலம் பூதான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு வாழும் பாமர ஏழைகளிடமிருந்து, பட்டா வாங்கித் தருவதாகக் கூறி வசூல் வேட்டையாடி அந்தப் பகுதி மக்களைச் சுரண்டியுள்ளார் ராஜேஷ் என்பவரும் அவரது சக கூட்டாளிகளும். இந்த வசூல் வேட்டையைக் கண்டித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளார் தோழர் சந்து நாயக். அங்கு வாழும் பாமர மக்களுக்குத் துணையாக இருந்ததாலும், வசூல் வேட்டைக்குத் தடையாக இருந்ததாலும், சமூக விரோதி ராஜேஷும் அவனது கூட்டாளிகளும் தோழர் சந்து நாயக் மேல் வன்மம் கொண்டுள்ளனர்.

கடந்த 15.7.25 அன்று காலை தோழர் சந்து நாயக், அவரது மனைவி நாரி பய், மகள் சிந்து ஆகியோர் அருகிலுள்ள சாலிவாகானா நகர் பூங்காவில் நடைப்பயிற்சி சென்றுள்ளனர். நடைப்பயிற்சி முடிந்த நிலையில், மனைவி, மகள் ஆகியோரை வீட்டிற்கு அனுப்பிவிட்டு நண்பர் ஒருவரது வருகைக்காகக் காத்திருந்தார் தோழர் சந்து நாயக். இந்தச் சந்தர்ப்பைப் பயன்படுத்திக் கொலையாளிகளான ராஜேஸ்யும் அவனது 3 கூட்டாளிகளும் தோழர் சந்து நாயக் மீது மிளகாய்ப் பொடி தூவி அவர் பின் வாங்கும் தருணத்தில் மிக அருகாமையில் இருந்து கொலையாளிகள் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். தோழர் சந்து நாயக் உயிரிழந்ததை உறுதிசெய்து கொண்ட கொலையாளிகள் அங்கிருந்து கார் மூலம் கொலை இடத்திலிருந்து தப்பி உள்ளனர்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டு அதிர்ந்து போன அந்தப் பகுதி மக்கள் காவல் துறைக்கு உடன் தகவல் அளித்தும் அரை மணி நேரம் தாமதித்துப் பின் சம்பவ இடத்திற்கு வந்துள்ளனர் காவல் துறையினர். காவல் துறையின் இந்தத் தாமத நடவடிக்கைமேல் அதிருப்தி தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள் இந்த இடத்திற்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்று முறையிட்டுள்ளனர்.

கொலையாளி ராஜேஸ் என்பவர் சிபி(லிபரேசன்) என்ற அமைப்பில் செயல்பட்டுப் பல முறைகேடு செய்தமையால் அதிலிருந்து வெளியேற்றப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் தோழர் கே.நாராயணா இந்தக் கொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துக் கொலையாளிகள் உடன் கைதுசெய்து தக்க தண்டனை வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

– ந.சேகரன்.

## அரியலூர் ஒன்றியக் குழு கூட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரியலூர் ஒன்றியக் குழு கூட்டம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. எஸ்.பிச்சப்பிள்ளை தலைமை வகித்தார். சேலத்தில் நடைபெறும் மாநில மாநாட்டுப் பேரணியில் பங்கேற்பது, சென்னையில் புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்பது மற்றும் உறுப்பினர்களின் செயல்பாடுகளில் முன்னேற்றம் குறித்தும் மாவட்டச் செயலாளர் கே.நடராஜன் விளக்கிப் பேசினார். அரியலூரில் நடைபெற்ற மாவட்ட மாநாடு வேலைகள் குறித்து மாவட்ட துணைச் செயலாளர் டி.தண்டபாணி விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் மாநாட்டின் வரவு செலவு கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒன்றியக் குழு கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர் து.பாண்டியன், ஒன்றிய துணைச் செயலாளர் கே.சிவக்குமார், கயர்லாபாத் பெ.பார்த்திபன், வைப்பம் கிளை ஜி.மணிவேல், பி.முருகேசன், ஆலத்தியூர் து.காசிநாதன், காவனூர் ரத்தினவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டுத் தீர்மானங்கள்

1. மாவட்ட தலைநகர் அரியலூரில் முந்தைய பேருந்து நிலையம் தரைமட்டமாக்கிப் புதியதாகக் கட்டப்பட்டு நிறைவடையும் நிலையில் உள்ளது. அங்கு கட்டப்படும் வணிக ரீதியான கடைகள் வெளிப்படைத் தன்மையாக ஆன்லைன் மூலம் உரிய தகுதியான அடிப்படையில் ஒதுக்கீடு செய்திட வேண்டும்.

2. அரியலூர் கல்லங்குறிச்சி நெடுஞ்சாலை போதுமான சாலை அகலம் இல்லாததாலும் ஓரங்கள் குண்டும் குழியுமாக உள்ள நிலையில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு வருகிறது. ஆகவே விரைவில் இச்சாலையை இருவழிப் பாதையாக அமைக்கப்பட வேண்டும் என்பவை உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திருச்சி மாநகர் மாவட்டத்தில் கையெழுத்து இயக்கம் துவக்கம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் மக்கள் கோரிக்கை கையெழுத்து இயக்கம் மேற்குப் பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி தலைமையில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் க.ஆயிஷா, ஆர்.ஆனந்தன், பி.ரவீந்திரன், எஸ்.சத்யா, எம்.சுமதி ஆகியோர் முன்னிலையில் தேசியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் துவங்கி வைத்தார்.

மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, இளைஞர் பெருமன்றச் செயலாளர் கே.தர்மராஜன், மாதர் சங்க மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.ஈஸ்வரி, பகுதிக் குழு உறுப்பினர்கள் மௌலானா ராமச்சந்திரன், ரபீக், அஜித்குமார், சண்முகம், ராஜேஸ்வரி குணசிங், தர்மா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அனைத்து வார்டுகளிலும் வரும் 30ம் தேதி வரை கையெழுத்து இயக்கம் நடைபெற்று 31ஆம் தேதி பேரணி மற்றும் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், செயற்குழு உறுப்பினர் பி.பத்மாவதி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

திருச்சி மாநகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மேம்பாலப் பணிகள் துரிதமாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்குத் தரக்கோரி திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் பால்பண்ணை முதல் துவாக்குடி வரை சர்வீஸ் சாலை அமைக்கும் திட்டத்தை உடனடியாகத் துவக்கிட வேண்டும்.

திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் பற்றாக்குறை மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்களை உடனடியாக நியமித்திட வேண்டும்.

திருச்சி மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட வேண்டும்.

மேலும் அந்தந்தப் பகுதி கோரிக்கைகளை முன்வைத்து வீடு வீடாகச் சென்று தெருக்களில் உள்ள குறைகளையும் கோரிக்கைகளையும் மனுவாகப் பெற்று வருகின்றனர். வெஸ்டரிபள்ளி அருகில் பேரணி துவங்கி ஆட்சித் தலைவர் அலுவலகம் வரைச் சென்று பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்தி பெற்ற அனைத்து மனுக்களையும் ஆட்சித் தலைவரிடம் பொது மக்களுடன் சேர்ந்து மனு அளிக்கப்படும்.

## தியாகி முத்துவின் 71 ஆம் ஆண்டு நினைவு தினம்

### கம்யூனிஸ்ட் கட்சியினர் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி



கோவை மாநகரம் உப்பிலிபாளையம் பகுதியில் வசித்து வந்த இளைஞர் தியாகி முத்து. கடந்த 1954 ஆம் ஆண்டு, இவர் பணியாற்றி வந்த கோத்தாரி மில் வளாகத்திற்குள் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

தியாகி முத்து கோத்தாரி மில் வளாகத்திற்குள் தொழிலாளர்களை ஏஐடியுசி தொழிற்சங்கத்தில் இணைப்பதிலும், தொழிலாளர்கள் மத்தியில் ஜனசக்தி பத்திரிகைச் சந்தா சேர்ப்பதிலும் முழு வீச்சில் ஈடுபட்டார். இதில் ஆத்திரமடைந்த மில் நிர்வாகம் 7.7.1954 அன்று குண்டர்களை வைத்து, ஆலை வளாகத்திற்குள் வைத்து முத்துவைக் கொலை செய்தது. இது தொழிலாளி வர்க்கத்தினர் இடத்தில் பேரதிர்ச்சியையும், பெரும் கோபத்தையும் ஏற்படுத்தியது.

தியாகி முத்துவின் 71 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி 7.07.2025 அன்று மாலை 5 மணிக்கு கோவை உப்பிலிபாளையத்தில் உள்ள தியாகி முத்து மேடைக்கு இரு கம்யூனிஸ்ட் கட்சியினரும் ஊர்வலமாக வந்து மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தினர். அங்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொடியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பீளமேடு நகரச் செயலாளர் ஏ.மேகநாதன் ஏற்றி வைத்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொடியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிழக்கு மண்டலச் செயலாளர் எஸ்.சண்முகம் ஏற்றி வைத்தார்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்குத் தியாகி முத்துவின் மகன் எம்.தங்கவேல் தலைமை தாங்கினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஏ.தமிழ்ச்செல்வன் வரவேற்றுப் பேசினார். மார்க்சியச் சிந்தனையாளர் மற்றும் எழுத்தாளர் எஸ்.பாலச்சந்திரன் துவக்க உரை நிகழ்த்தினார். யு.கே.சுப்பிரமணியன், ஆர்.பழனிசாமி, பி.சந்திரசேகரன், யூ.பி. நாகேந்திரன், வேலுச்சாமி, மாதவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாவட்டத் துணைச் செயலாளர் மௌ.குணசேகர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் மு.வ.கல்யாணசுந்தரம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் எம்.குணசேகரன், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.கனகராஜ், ஆர்.மூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். ரெனீத் குமார் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

## காவல்துறையில் சீமான் மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி புகார் மனு



இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் திருப்பூர் புறநகர் மாவட்டக் குழு சார்பில், பெண்களையும் பெண்கள் அமைப்புகளையும் பொதுவெளியில் தொடர்ந்து இழிவாகப் பேசி வரும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரி திருப்பூர் மாவட்ட ஊரக காவல்துறை உதவி கண்காணிப்பாளர் அவர்களிடமும், உடுமலைப்பேட்டை தாலுகா குழு சார்பில் உடுமலை காவல் நிலையத்திலும் புகார் மனு கொடுக்கப்பட்டது.

நிகழ்வில் சீமானைக் கண்டிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளைக் கையில் எடுத்து வந்து கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

இதில் மாவட்ட தலைவர் கே.சித்ரா, மாவட்டச் செயலாளர் பி.நதியா, மாவட்ட துணைத் தலைவர் பி.ராஜேஸ்வரி, மாவட்ட துணைச் செயலாளர் ஏ.பேபி, மாவட்டப் பொருளாளர் பி.எஸ்.செல்வி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.பாப்பாத்தி, என்.சாவித்திரி, ஏ.வாசுகி, ஜி.ஜீவா, எஸ்.கோகிலா, பி.பாலாமணி, இந்திராணி, ஜோதிமணி உட்பட மாதர் சம்மேளன தோழர்கள் கலந்து கொண்டனர்.

## போக்குவரத்து ஏஐடியுசி கூட்டம்




தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களின் சம்மேளனம் (AITUC) மாநில நிர்வாகக் குழு கூட்டம் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் எஸ்.சையது இப்ராகிம் தலைமையில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் ஆர்.ஆறுமுகம் வேலையறிக்கையைச் சமர்ப்பித்து நடந்து முடிந்த 15வது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கான விளக்கங்களைப் பேசினார்.

சேலம் போக்குவரத்துக்கழகச் சங்கத் தொழிலாளர்கள் கூட்டத்தில் சம்மேளன துணைப் பொதுசெயலாளர்கள் என்.முருகராஜ், பி.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செயலாளர்கள் எம்.சண்முகம், என்.கோபிநாதன், துணைத் தலைவர்கள் ஆர்.திருமுருகன், டி.எம்.கணேசன், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆர்.ராஜேந்திரன், ஜே.ஸ்ரீதர், எம்.ஜப்பான் சீனி ரவி உட்பட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போக்குவரத்துக் கழக மண்டலப் பொதுச் செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

நாமக்கல் மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் பி.தனசேகரன் கலந்து கொண்டவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்புரையாற்றினார்.

சம்மேளனப் பொருளாளர் கே.நேருதுரை வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்தார். கட்டிடச் சங்கச் செயலாளர் ஏ.குமார் வாழ்த்துரை வழங்கினார்.

## வேடசந்தூரில் காத்திருப்புப் போராட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேடசந்தூர் ஒன்றியக் குழுவின் சார்பில் குட்டம் கிராமம் தேவிநாயக்கன்பட்டி பட்டியலின மக்களுக்கான வீட்டுமனைப் பட்டா கேட்டு மூன்று ஆண்டுகளாக அலைக்கழிக்கப்பட்டதைக் கண்டித்துக் காத்திருப்புப் போராட்டம் வேடசந்தூர் வட்டாட்சியர் வளாகத்தில் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்திற்குக் கட்சியின் ஒன்றியச் செயலாளர் எம்.பி கனிவேல், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் சி.எஸ்.முத்துசாமி, எம்.எம்.பொன்னுச்சாமி, வி.ஆறுமுகம் எஸ்.பழனிச்சாமி, மோட்சராணி முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் தலைமை தாங்கினார். கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்கள் எம்.சந்திரசேகரன், பி.கிருஷ்ணசாமி, பி.தெய்வேந்திரன், செந்தில்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். துணை வட்டாட்சியரின் அழைப்பின் பேரில், மாவட்டச் செயலாளர் மணிகண்டன் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் மூன்று மாதங்களுக்குள் வீட்டுமனைப் பட்டா வழங்க ஏற்பாடு செய்வதாக உடன்பாடு ஏற்பட்டது. இறுதியில் ஆர்.அறிவழகன் ஒன்றியத் துணைச் செயலாளர் நன்றி கூறினார். இதில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## குடியாத்தத்தில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் சிறப்புப் பேரவைக் கூட்டம்

குடியாத்தம் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க வேலூர் மாவட்டக் குழு சார்பில் மாவட்டச் சிறப்புப் பேரவைக் கூட்டம் குடியாத்தம் ரோட்டரி கிளப் அரங்கில் கடந்த 15 ம் தேதி நடைபெற்றது. 100 நாள் வேலைத் திட்டத் தொழிலாளர்களுக்கு வேலை அல்லது நிவாரணம் கேட்டு மனு கொடுக்கும் இயக்கத் திட்டமிடுதல், உறுப்பினர் சேர்க்கை கிளை, இடைக் குழுக்கள் அமைத்தல் குறித்து மாவட்டச் சிறப்புப் பேரவைக் கூட்டம் நடந்தது.



கூட்டத்திற்கு வி.தொ.ச மாவட்டச் செயலாளர் கே.சி.பிரேம்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் கே.ரோஸ் மாவட்டப் பொருளாளர் ஏ.சாந்தி முன்னிலை வகித்தனர். இதில் வி.தொ.ச மாநிலப் பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் சிறப்புரை ஆற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் ஜி.லதா வாழ்த்துரை வழங்கினார். இக்கூட்டத்தில் குடியாத்தம் தெற்கு, மேற்கு, வடக்கு ஒன்றியம், கே.வி.குப்பம், பேரனாம்பட்டு, வேலூர், காட்பாடி, அணைக்கட்டு மற்றும் ராணிப்பேட்டை பகுதி வி.தொ.ச மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் சுப்ரமணியன், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.டி.எஸ்.மகேஷ்பாபு, என்.எஃப்.ஐ.டபிள்யு மாவட்டச் செயலாளர் கே.கல்பனா சந்தர், சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர் எல்.மணி, சிபிஐ மாவட்டப் பொருளாளர் எஸ்.காவிரி, மாவட்ட துணைச் செயலாளர் டி.ஆனந்தன் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் வே.குமார், சந்திரசேகர், அருண்குமார், எஸ்.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கே.வி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ நினைவு தினம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் ஒன்றுபட்ட சேலம் மாவட்டச் செயலாளர், நாமக்கல் சட்டமன்ற தொகுதியின் முதல் எம்.எல்.ஏ நாமக்கல் நல்லிபாளையம் கே.வி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ அவர்களின் நினைவு தினம் 19.7.2025 அன்று நாமக்கல் மணிக்கூண்டு அருகில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் பி.வி.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் க.அன்புமணி, த.வி.சங்கத்தின் மாவட்டச் செயலாளர் என்.செல்வராஜ், ஏஐடியுசி தலைவர் டி.கே.சுப்பிரமணி, கேவிஆர் சகோதரர் கே.வி.சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## தொடர்ச்சியாக நூறு நாள் வேலை வழங்கக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம்



தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 14.7.2025 காலை 11.00 மணிக்கு நாமக்கல் மாவட்டம் எலச்சிபாளையம் ஒன்றியம் மானத்தி கிராமத்தில் 100 நாள் வேலை செய்யும் பணியாளர்கள் தொடர்ச்சியாக நூறு நாள் வேலை வழங்கக் கோரி, சுழற்சி முறையில் வேலை கொடுப்பதை உடனடியாக நிறுத்தக் கோரி, அரசு அறிவித்த 336 சம்பளம் ஒரு நாள் ஒன்றுக்கு வழங்கக் கோரி, பணித்தளத்தில் ஏற்படும் சிறு சிறு பிரச்சனைகளை அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு தீர்க்க வலியுறுத்தி 100 நாள் வேலைக்கான தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு தோழர் கே.பழனிவேல் மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினர் தலைமையில், அருள்மொழி, கஸ்தூரி, மஞ்சுளா தேவி, விஜயா இந்திராணி, சுமதி ஆகிய தோழியர்களின் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சி.ஜெயராமன் மாவட்டச் செயலாளர் ஆர்ப்பாட்டத்தில் சிறப்புரையாற்றினார். பி.தனசேகரன் பொதுச்செயலாளர் ஏஐடியுசி நிறைவுரை செய்து ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குச் சங்க நிர்வாகிகள் ஏழு பேர் கொண்ட குழு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மனு கொடுக்கப்பட்டது. மனுவைப் பெற்றுக்கொண்ட ஆட்சித் தலைவர் உடனடியாக அனைவருக்கும் வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

## புதுக்கோட்டையில் சிறுகதைப் பயிலரங்கம்



புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி தமிழ்த் துறையின் கலை அருவி இலக்கியப் பேரவையும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் இணைந்து மாணவர்களுக்கான இருநாள் சிறுகதைப் பயிலரங்கை நடத்தின.

தொடக்க நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் ஜ.பரசுராமன் தலைமையுரை ஆற்றினார். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழ கத்தின் நாட்டுப்புறவியல் துறைத் தலைவர் பேரா.இரா. காமராசு கதைக்கலாம் வாங்க சிறுகதை என்ன செய்யும் என்ற தலைப்பில் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். நவீனச் சிறுகதை என்ற தலைப்பில் பெருமன்றத்தின் மாநிலத் துணைத்தலைவர் எழுத்தாளர் கண்மணி ராசா அமர்வை உரை நிகழ்த்தினார்.

இரண்டாம் நாள் சிறுகதைப் பின்னணி இடமும் காலமும் என்ற தலைப்பில் எழுத்தாளர் அண்டனூர் சுரா, பெண் படைப்பாளுமை பெண் சித்தரிப்பு என்ற தலைப்பில் எழுத்தாளர் முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி, சிறுகதையில் அழகியலும் இனவரைவியலும் என்ற தலைப்பில் எழுத்தாளர் கோ. கலியமூர்த்தி ஆகியோர் பேசினர். தமிழ்ப் பேராசிரியர்களின் தொகுப்பும் மாணவர்களை வழிநடத்தலும் மதிப்புமிக்க நிகழ்வாக அமைந்தன.

நிறைவு நிகழ்ச்சியில், பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலர் டாக்டர் த.அறம் மாணவர்கள் முன்னிலையில் மூன்று ஆண்டுகளுக்கான கல்லூரியுடன் பெருமன்றம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி, பயிலரங்கில் பங்கு பெற்ற மாணவர்களுக்கு முதல்வர் மற்றும் தமிழ்த் துறை தலைவர் முன்னிலையில் சான்றிதழ் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் எழுத்தாளர் முனைவர் துவாரகா சாமிநாதன், தமிழ்த் துறைத் தலைவர் தயாநிதி வாழ்த்துரை வழங்கிட, பெருமன்றத்தின் மாவட்டச் செயலர் பாலச்சந்திரன் நன்றி கூற நிகழ்வு நிறைவுற்றது.



கலை இலக்கியப் பூங்கா

விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலியை வழங்கப் பயன்பட்ட மரக்கால் அளவு குறைவாகப் பிடிக்கும் தன்மையதாய் உருவாக்கப்பட்டிருக்கும். இதனால் உடலுழைப்பாளி குறைந்த அளவு கூலியைப் பெற நில உடைமையாளர் அதிக தானியத்தைப் பெறுவார்.

# மரக்கால் கூறும் வரலாறு



ஆ.சிவசுப்பிரமணியன்

**தானியங்கள், பயறு வகைகள், உப்பு, எண்ணெய் வகைகள், பால் என்பனவற்றின் விற்பனையில் அல்லது பரிவர்த்தனையில் பயன்படுத்தும் அளவை முறையானது முகத்தலளவை என்றழைக்கப்பட்டது. தற்போது முகத்தலளவையால் அளக்கப்பட்ட பலபொருள்கள் நிறுத்தலளவை முறைக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டன.**

இவற்றுள் மிக முக்கிய உணவுத் தானியமான நெல்லும் அதிலிருந்து பெறப்படும் அரிசியும் அடங்கும். இவை இந்திய ஒன்றிய அரசின் மெட்ரிக் நிறுத்தலளவு முறைக்குள்தான் விற்கப்பட வேண்டும் என்பது விதியாக உள்ளது.

இவ்விதிமுறை நடைமுறைப்படுத்தப் படுமுன் மரபுவழி முகத்தலளவுக் கருவிகளான, மரக்கால், செவிடு, நாழி, ஆழாக்கு, உழக்கு உரி, படி, பதக்கு என்ற அளவு கருவிகளால் இவை அளக்கப்பட்டு வந்தன. இவற்றுள் பேரளவு கொண்டதாகப் பறை விளங்கி உள்ளது. இவை வட்டாரத்தன்மை கொண்டு வட்டாரத்திற்கு வட்டாரம் சிறு வேறுபாடுகள் கொண்டவையாக இருந்துள்ளன. அளவு கருவிகளின் பயன்பாடானது ஒரு குறிப்பிட்ட சமூகத்தினது நாகரீகப் படிநிலையின் அளவுகோலாகும்.

இவ்வகையில் நம் முன்னோர்கள், அளவை முறைகளில் நுணுக்கமான தேர்ச்சி பெற்றிருந்ததை நமது தொன்மையான இலக்கிய, இலக்கண நூல்கள் வழியே அறிய முடிகிறது. தமிழ்க் கல்வெட்டுக்களும் நில அளவை, பொன் நிறுவை, தானியம் அளத்தல் தொடர்பான செய்திகளைக் குறிப்பிடும் போது அக்காலத்தில் வழக்கில் இருந்த அளவைகளை மிகத் துல்லியமாகக் குறிப்பிட்டுள்ளன. சான்றாகப் பிற்காலப் பாண்டியர் ஆட்சியின் பொருளியல் குறித்து எழுதும் போது பாண்டியர் ஆட்சியில் வழக்கில் இருந்த பல்வேறு அளவை முறைகளை அழகப்பன் (2000: 196) குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் கொள் அளவைகள் என்ற தலைப்பில் அவர் குறிப்பிட்டுள்ள அளவைகள் வருமாறு :

**2 செவிடு ... 1 பிடி (கைப்பிடி)**

**5 செவிடு.... 1 ஆழாக்கு**

**2 ஆழாக்கு ....1 உழக்கு.**

**2 உழக்கு... 1 உரி.**

**2 உரி... 1 நாழி.**

**8 நாழி .... 1 குறுணி.**

**2 குறுணி .... 1 பதக்கு.**

**2 பதக்கு...1 தூணி.**

**3 தூணி... 1 கலம்**

இதுபோல் பல்லவர், பிறகாலச் சோழர் காலத்திலும் கொள்அளவு முறையும் அதற்கான அளவு கருவிகளும் வழக்கில் இருந்துள்ளன.

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் தொடக்க காலத்திலும் பழைய அளவை முறைகள் நடைமுறையில் இருந்துள்ளன. கிழக்கிந்தியக் கம்பெனி பாளையக்காரர்களிடமும் மக்களிடமும் தானிய வடிவிலேயே தொடக்கத்தில் வரியைப் பெற்றுள்ளனர்.

தமிழ் மன்னர்கள் ஆட்சியில் மரக்கால்களுக்குப்பெயர்இட்டதுடன் அதன் கொள்ளளவைஒழுங்குபடுத்தியுள்ளதையும் கல்வெட்டுக்கள் வழியே அறியமுடிகிறது. பிற்காலச் சோழர்காலத்தில் ஆடவல்லான், இராஜகேசரி,



என்ற பெயர்களில் மரக்கால்கள் இருந்துள்ளன. பெயர் வேறுபாடு இருப்பினும் இவை ஒரே கொள்ளளவு கொண்டவையாக இருந்துள்ளன. இராஜராஜ சோழனின் (கி.பி985 1014) 29வது ஆட்சியாண்டுக் (கி.பி 1014) கல்வெட்டொன்றில்

**'இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு பன்னீராயிரத்து ஐந்நூற்று முப்பதின் கலனே'**

**'ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்ற மரக்காலால் அளக்கக்கடவ நெல்லுப் பதினாயிரத்து எழுநூற்று நாறபத்து ஐங்கலனே'**

என்ற கல்வெட்டுத் தொடர்களால் இதை அறியமுடிகிறது

(தெ.இ.க.தொகுதி 2. பகுதி1–2.க.எண்:4)

## மரக்காலின் தொன்மை:

சங்க இலக்கியத்தில் நெல் அளக்கும் கலன் 'அம்பணம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்து (69:89)என்ற சங்க இலக்கிய நூலில் 'நெல்லின் அம்பண அளவை'என்ற சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது. உரையாசிரியர்கள் அம்பணம் என்ற சொல்லுக்கு மரக்கால் என்று பொருள் உரைத்துள்ளனர். மதுரை நகர் அங்காடித் தெருக்களில் 'அம்பணம்'ஏந்தி அலையும் தரகர்களை சிலப்பதிகாரம் (14:209) 'அம்பண அளவையர் எங்கணும் திரிதர' என்று குறிப்பிடுகிறது. இவர்கள் தானிய விற்பனையில் அவற்றை அளந்து தரும் பணியை மேற்கொண்டிருந்தனர் என்று கருதலாம். நம் காலத்திலும் மரக்காலால் தானியங்களை அளப்பதில் வல்லவர்கள் இருந்துள்ளனர். நெல்லை குமரி மாவட்டங்களில் இவர்களை 'அளவைக்காரர்' என்றே அழைத்துள்ளனர்.

ஒருமரக்கால் என்பது நான்கு படி அளவு பிடிப்பதாக இருந்தது. நெல்லை மாவட்டத்தில் இருபத்தியெட்டு மரக்கால் அளவிலான நெல் ஒரு கோட்டை ஆகும். இவ்வகையில் ஒரு கோட்டை நெல் என்பது 112 படிகள் கொண்டதாகும். புன்செய் தானியங்களைப் பொருத்த அளவில் 24 மரக்கால் ஒரு கோட்டை ஆகும். இது 96 படியளவு கொண்டதாகும். சின்ன (சிறிய) கோட்டை என்றும் கூறுவர்.

தானியங்களை மரக்காலால் அளப்பதென்பது நுட்பமான செயலாகும். தரையில் குத்த வைத்துக் கொண்டு மரக்காலுக்குள் தானியத்தை நிரப்பித் தொடர்ச்சியாக அளப்பதற்குக் கைகளும் கால்களும் வலுவாக இருக்கவேண்டும். மேலும் விரைவாக இதைச் செய்யவேண்டும்.

அளக்கும் மரக்கால்களின் எண்ணிக்கையை உரக்கக் கூறியவாறே அளக்கவேண்டும். மொத்தத்தில் மரக்காலின் துணையால் அதிக அளவிலான தானியங்களை விரைந்து அளப்பதென்பது எளிதானதல்ல.

ஓர் அளவு கருவி என்ற முறையில் வாங்குபவன் விற்பவன், வேலை தருபவன் வேலை செய்பவன், என்ற இருவருக்கும் இடையில் மரக்காலும் நாழி போன்ற பிற முகத்தலளவைக் கருவிகளும் தவிர்க்க இயலாப் பங்களிப்பைச் செய்து வந்தன. பொருளுக்குப் பொருள் பண்டமாற்று செய்தலிலும் மரக்கால் உள்ளிட்ட முகத்தலளவைக் கருவிகளின் பங்களிப்பு இருந்தது. ஆனால் இவற்றுடன் நில்லாது சில முரண்பாடுகளையும் இவை உருவாக்கின.

அரசுக்குச் செலுத்தும் நிலவரியை நெல் அல்லது பயிரிட்ட தானியத்தை வரியாகச் செலுத்தும் போதும், தனிமனிதர்களுக்கும் கோவில்களுக்கும் குத்தகை நில நெல்லை அளக்கும் போதும் இன்றைய குமரிமாவட்டம் திருவிதாங்கூர் மன்னராட்சியில் இருந்த போது இவை நிகழ்ந்துள்ளன. இதுகுறித்து ஓலை ஆவணம் ஒன்று கூறும் செய்தியை ஆய்வாளர் அ.கா.பெருமாள் (1999:18) குறிப்பிட்டுள்ளார். இந்த ஓலை ஆவணம் நாட்டுக் கூட்டம் என்ற அதிகார அமைப்பிற்கு அப்போதைய திருவிதாங்கூர் மன்னன் மார்த்தாண்ட வர்மன் (17061758) 1739 இல் இட்ட கட்டளையாகும். அது வருமாறு:

'நாஞ்சில் நாடு முழுக்க விலைமரக்கால், பாட்டமரக்கால் என்ற இருவகை மரக்கால்களைப் பயன்படுத்துகின்றனர். நெல்லை அளக்கும்போது தாங்களவு, ஒப்பளவு முறை பயன்படுத்தப்படுகிறது. தாங்களவில் நெல்லைச் சிந்தவிட்டுச் சேர்ப்பது தவறு. ஒப்பளவே சரியான அளவு. அத்தோடு மரக்கால் அளவும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.'

## தொம்பரை மரக்கால்:

தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சுட்டப்பட்ட காவேரி ஆறுபாயும் சமவெளிப்பகுதியில் இரண்டு வகை மரக்கால்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. ஒன்று அதிக அளவு தானியத்தைக் கொள்ளும் மரக்கால். இது 'தொம்பரை மரக்கால்' இதைத் தம் நிலங்களைக் குத்தகைக்குவிடும் நிலவுடைமையாளர்களும் 'சமய நிறுவனங்களும் குத்தகை விவசாயிகளிடம் இருந்து தம்பங்கைப் பெறப் பயன்படுத்தினார்கள். இதனால் தமக்குரிய பங்கை விட அதிகப் பங்கைப் பெற்றார்கள் (திருடினார்கள் !). குத்தகை எடுத்து உழைத்தவர்கள் குறைவான நெல்லைப் பெற்றுப் பாதிக்கப்பட்டனர்.

நடைமுறையில் குத்தகை எடுத்தவர்கள் மட்டுமின்றி, நாற்று நடுதல், களை எடுத்தல் அறுவடை செய்தல், உரம் சுமத்தல், மாட்டுவண்டி ஓட்டுதல், மாடுகளை மேய்த்தல் என்ற பணிகளைச் செய்தோரும் தொம்பரை மரக்காலால் பாதிக்கப்பட்டனர். எவ்வாறெனில் இவர்களது உழைப்புக்கான ஊதியம் பெரும்பாலும் பண வடிவி லின்றி நெல்லாகவே வழங்கப்பட்டது. தம் அன்றாடத் தேவைக்கான உப்பு, புளி, மிளகாய் வற்றல், கடுகு, சீரகம் என்ற பொருள்களை நெல்லுக்குப் பரிவர்த்தனையாகவே இவர்களில் பெரும்பாலோர் வாங்கி வந்தனர். நெல்லைப் பரிவர்த்தனையாகப் பெற்றுக் கொள்ளும் கடைக்காரர்கள் தொம்பரை மரக்காலால் அளந்துதான் பெற்றுக் கொள்வார்கள். மற்றொரு பக்கம் இவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்படும் நெல் முக்காமரக்கால் என்ற மரக்காலால் அளக்கப்பட்டது.

## முக்கா மரக்கால்:

விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலியை வழங்கப் பயன்பட்ட மரக்கால் (சிலநேரங்களில் படி அல்லது நாழி) அளவு குறைவாகப் பிடிக்கும் தன்மையதாய் உருவாக்கப்பட்டிருக்கும். இதனால் உடலுழைப்பாளி குறைந்த அளவு கூலியைப் பெற நில உடைமையாளர் அதிக தானியத்தைப் பெறுவார். இது 'முக்கா மரக்கால்' எனப்பட்டது. தரமான அளவில் இருந்து கால்பங்குக் குறைவான அளவைக் கொண்டதாகவே இது இருக்கும்.

(மரக்கால் உடைப்புப் போராட்டம் அடுத்த இதழில்)



# ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி தொடங்க வேண்டும்

## தஞ்சை வடக்கு மாவட்ட மாநாடு வலியுறுத்தல்







இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்ட 25வது மாநாடு ஜூன் 18, 19 தேதிகளில் திருவிடைமருதூர் ஒன்றியம், திருநாகேஸ்வரம், ஸ்ரீ உப்பிலி மஹால் திருமண மண்டபத்தில் வழக்கறிஞர் கு.ஆறுமுகசாமி நினைவு அரங்கில், கட்சியின் மாவட்ட முன்னணி நிர்வாகிகள் ஆர்.தில்லைவனம், தங்க.சக்கரவர்த்தி, ஏ.எம்.இராமலிங்கம், பா.சரண்யா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக திருநாகேஸ்வரம் கடை வீதியில் இருந்து செஞ்சட்டை பேரணி நடைபெற்றது. பேரணியை அதிர்வேட்டுகள் மற்றும் தப்பாட்டம் கலைநிகழ்ச்சிகளுடன் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் முன்னாள் எம்.எல்.ஏ கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

கட்சிக் கொடியை மூத்த தோழர் ஏ.ராதாகிருஷ்ணன் ஏற்றி வைத்தார். தியாகிகள் திருவுருவப் படங்களுக்கு மூத்த தோழர் டி.ஆர்.குமரப்பா மலரஞ்சலி செலுத்தினார். அஞ்சலித் தீர்மானத்தை எம்.வெங்கடேசன் முன்மொழிந்தார். மாநாட்டில் பங்கேற்றுள்ள பிரதிநிதிகள வரவேற்று வரவேற்புக் குழுச் செயலாளர் ஏ.ஜி.பாலன் உரையாற்றினார். கட்சியின் உறுதிமொழியை ப.சரவணகுமார் வாசித்தார். பஞ்சாப் மாநிலம், சண்டிகரில் செப்டம்பர் 21 முதல் 25 வரை நடைபெற உள்ள அகில இந்திய மாநாட்டு வரைவு அறிக்கையை முன்வைத்துக் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து சிறப்புரை ஆற்றினார்.

அரசியல், அமைப்பு நிலை மற்றும் வேலை அறிக்கைகளை முன்வைத்து மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி உரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாவட்டப் பொருளாளர் ஏ.ராஜேந்திரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் சாமு.தர்மராஜன், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் க.சுந்தர்ராஜன், ஏஐடியூசி பட்டு கைத்தறி மாநிலத் தலைவர் கோ. மணிமூர்த்தி, திருவிடைமருதூர் ஒன்றியச் செயலாளர் ஆர்.பழனி உள்ளிட்ட 250க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் மாவட்டம் முழுவதும் இருந்து பங்கேற்றனர். அரசியல், அமைப்பு நிலை மற்றும் வேலை அறிக்கைகள் மீது பிரதிநிதிகள் விவாதம் மற்றும் தொகுப்புரை நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வில் கணக்கு தணிக்கைக் குழு அறிக்கையை ஏஐடியூசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம் முன்வைத்தார். பின்னர் 27 நிர்வாகிகளை உள்ளடக்கிய புதிய மாவட்டக் குழுவும், ஒன்பது நிர்வாகிகளை உள்ளடக்கிய மாவட்ட நிர்வாகக் குழுவும் தேர்வு செய்யப்பட்டது. கட்சியின் மாவட்டச் செயலாளராக மு.அ.பாரதி மூன்றாவது முறையாக மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். மாவட்டத் துணைச் செயலாளராக ஆர்.செந்தில்குமார் மாவட்டப் பொருளாளராக ஏ.ராஜேந்திரன் ஆகியோரும் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்துக் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் முன்னாள் எம்.எல்.ஏ உரையாற்றினார். சேலத்தில் நடைபெற உள்ள மாநில மாநாட்டுப் பிரதிநிதிகளாக ஆர்.செந்தில்குமார், ஏ.ராஜேந்திரன், பா.சரண்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

திருவிடைமருதூர் ஒன்றியம், ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி தொடங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசு கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை விரைவில் அமைக்க வேண்டும்.

என்பவை உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஈரோடு தெற்கு மாவட்ட மாநாடு






இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட 14வது மாநாடு ஜூன் 15, 16 தேதிகளில் நடைபெற்றது.

முதல் நாள் ஜூன் 15 மாலை ஈரோடு வட்டாரச் செயலாளர் ஜி.கல்யாண சுந்தரம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் மாநிலக் கட்டுப் பாட்டுக் குழுத் தலைவர் தோழர் கே.சுப்பராயன் எம்.பி மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, முன்னாள் தேசியக் குழு உறுப்பினர் ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

ஜூன் 16 காலை 10 மணிக்கு மாவட்டக் கட்சி அலுவலகத்தில் பிரதிநிதிகள் மாநாடு கொடி ஏற்றத்துடன் துவங்கியது. தோழர்கள் எஸ்.மகாலிங்கம், அமல் உன்னிகிருஷ்ணன், எம்.ராணி ஆகியோர் அடங்கிய தலைமைக் குழு மாநாட்டை வழிநடத்தியது. மாவட்டப் பொருளாளர் என்.ரமணி வரவேற்புரை நிகழ்த்தினார். எம்.ரவி துவக்க உரை ஆற்றினார். கே.சுப்பராயன் எம்.பி அரசியல் விளக்க உரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். அறிக்கை மீது விவாதம் நடந்து வேலை அறிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்னர், 25 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழுதேர்வுசெய்யப்பட்டது. எஸ்.டி.பிரபாகரன் மாவட்டச் செயலாளராகவும், எம்.குணசேகரன், ஜி,கல்யாணசுந்தரம் துணைச் செயலாளர்களாகவும், என்.ரமணி பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். ஸ்டாலின் குணசேகரன் நிறையுரையாற்றினார். கே.கல்யாணசுந்தரத்தின் நன்றியுரையுடன் மாநாடு சிறப்பாக முடிந்தது.

# தென்பெண்ணையாற்றின் நதிநீர் உரிமையைப் பாதுகாத்திட வேண்டும்

## விழுப்புரம் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 24வது மாவட்ட மாநாடு ஜூலை 8, 9 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. முன்னதாக நடைபெற்ற பேரணிப் பொதுக்கூட்டத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்சித் தோழர்கள் கலந்து கொண்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக் குழு தலைவரும் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் வகிதா நிஜாம் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்பெண்ணையாற்றின் நதிநீர் உரிமையைப் பாதுகாத்திட வேண்டும்.

மாநாட்டில் மரக்காணம் உப்பளத் தொழிலாளர்களைப் பாதுகாத்திட வேண்டும்.

செஞ்சி விக்கிரவாண்டி ஆகிய தாலுகா விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான நந்தன் கால்வாய் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். என்பவை உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் ஆ.சௌரிராஜன் மாவட்டச் செயலாளராகவும் ஆர்.கலியமூர்த்தி துணைச் செயலாளராகவும் ஆர்.முருகன் துணைச்செயலாளராகவும் பி.பாலசுப்பிரமணியம் மாவட்டப் பொருளாளராகவும் மேலும் 27 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டனர்.




**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்;
உண்டு கொழுக்கும் வீணர்களை விலக்கி வைப்போம்!**

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# மாநகராட்சி சொத்து வரியை குறைத்திடுக!

## மத்திய சென்னை மாவட்ட மாநாடு வலியுறுத்தல்






இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட இரண்டாவது மாநாடு தங்கச் சாலை எஸ்.டி.ஆர் திருமண மண்டபத்தில் 20.07.2025 அன்று விடுதலைப் போராட்ட வீரர் ஜனசக்தி வி.ராதாகிருஷ்ணன் நினைவு அரங்கத்தில் நடைபெற்றது.

மாநாட்டுக் கொடியை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ்.கண்ணன் ஏற்றி வைத்தார்.

மாநாட்டுத் தலைமைக் குழுவாக ப.மாரியப்பன், இரா.விஜயகுமார், ஜே.ஏழுமலை, என்.மஞ்சு ஆகியோர் செயல்பட்டனர். மு.சாமிநாதன் வரவேற்புரை ஆற்றினார். மு.சம்பத் அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி மாநாட்டைத் துவக்கி வைத்து அரசியல் விளக்க உரையாற்றினார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் நிறைவுரையாற்றினார். இந்திய மாதர் தேசியச் சம்மேளனத்தின் மாநிலத் தலைவர் ஜி.மஞ்சுளா மாநாட்டை வாழ்த்திப் பேசினார்.

வேலை அமைப்பு நிலை அறிக்கையை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி முன்வைத்துப் பேசினார். வரவு செலவு அறிக்கையை பொருளாளர் மு.வரதன் வாசித்தார்.

மாநாட்டுப் பிரதிநிதிகளின் விவாதத்திற்குப் பிறகு அறிக்கை ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாநாட்டுத் தீர்மானங்களை இரா.ரஞ்சித், இரா.துரைசாமி, இம்ரான் உள்ளிட்டவர்கள் முன்மொழிந்தனர்.

புதிய நிர்வாகிகள் 15 பேர் கொண்ட மாவட்டக் குழு ஒரு அழைப்பாளர் என ஏக மனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டச் செயலாளராக மு.வரதன், துணைச் செயலாளர்களாக ப.மாரியப்பன், ஜெ.ஏழுமலை, பொருளாளராக சக்திவேல் ஆகியோர் ஏக மனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### தீர்மானங்கள்:

1. பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் சொத்து வரியை அபரிமிதமாக உயர்த்தி உள்ளது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் 6% சொத்து வரி உயர்த்துவதாக அறிவித்து வசூலித்து வருகிறது. மேலும் வீட்டு வரி உயர்வு, மின்சாரக் கட்டண உயர்வு, குடிநீர் வரி, கழிவு நீர் வரி என்ற வகையில் வரி உயர்வைக் குறைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

2. சென்னை மாநகர் அமைப்புசாராத் தூய்மைப் பணியாளர்கள் பலர் தெரு ஓரங்களிலும் சாலையோரக் குடிசைகளிலும் வாழ்ந்து வரும் இந்த ஏழை எளிய மக்களுக்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டித் தர வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டும் என்பவை உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கலைஞர் ஆட்சியில் 110 பேருக்கு வழங்கப்பட்ட இலவச பட்டாமனையில் வீடு கட்டித் தரவேண்டும்

## திருச்சி புறநகர் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்






இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி புறநகர் மாவட்ட 24வது மாநாடு லால்குடியில் நடைபெற்றது. இம்மாநாட்டின் தலைமைக் குழுவாக எம்.சுப்பிரமணியன், எம்.தமிழரசன், பி.மாரியம்மாள் ஆகியோர் செயல்பட்டனர். மாநாட்டின் கொடியை மூத்த உறுப்பினர் முத்துக்குமார் ஏற்றி வைத்தார்.

அஞ்சலித் தீர்மானத்தை பி.கணேசன் முன்மொழிந்தார். கே.அண்ணாதுரை வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டைத் தொடங்கி வைத்து மாநிலச் செயற்குழு உறுப்பினரும், நன்னிலம் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான பி.பத்மாவதி உரையாற்றினார். இதில் அரசியல், அமைப்பு நிலை அறிக்கையை மாவட்டச் செயலாளர் செ.ராஜ்குமார் சமர்ப்பித்தார். வேலை அறிக்கையை மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.பழனிச்சாமி சமர்ப்பித்தார்.

நிதிநிலை அறிக்கையை மாவட்டப் பொருளாளர் உ.பக்கிரிசாமி சமர்ப்பித்தார். பிரதிநிதிகளின் விவாதங்களுக்குப் பின் அனைத்து அறிக்கைகளும் ஒரு மனதாக ஏற்கப்பட்டன. கட்சியின் மாநில வளர்ச்சி பிரச்சாரக் குழு உறுப்பினர் த.இந்திரஜித் வாழ்த்துரை வழங்கினார்.

கட்சி அமைப்பு விதிப்படி பழைய மாவட்டக் குழு கூடி 37 புதிய மாவட்டக் குழு உறுப்பினர்களைத் தேர்வு செய்யப்பட்டு, செ.ராஜ்குமார் மீண்டும் திருச்சி புறநகர் மாவட்டச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.


மாநாட்டை நிறைவு செய்தும் புதிய மாவட்டக் குழுவையும், மாவட்டச் செயலாளரை வாழ்த்தியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச்செயலாளரும் பெருந்துறை முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான நா.பெரியசாமி உரையாற்றினார். லால்குடி ஒன்றியச் செயலாளர் சப்தரிஷி நன்றி கூறினார்.

### தீர்மானங்கள்

துவாக்குடி முதல் பால்பண்ணை வரையிலான சாலையை 45 மீட்டர் அகலத்திற்கு அமைத்து அதில் சர்வீஸ் சாலை அமைக்க வேண்டும்.

துறையூர் ஒன்றியம் செங்காட்டுப்பட்டியில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாக கலைஞர் ஆட்சியில் 110 பேருக்கு வழங்கப்பட்ட இலவச பட்டாமனையில் வீடு கட்டித் தரவேண்டும்.

மணப்பாறை பகுதியில் அமைக்கப்படும் புறவழிச் சாலைக்குத் தற்போது ஒதுக்கி இருக்கும் குறைவான நிதிக்குப் பதிலாக கூடுதலான நிதியை ஒதுக்கி உடனடியாக வேலையைத் தொடங்க வேண்டும். என்பவை உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**சேலம் மாநகரில் கூடுவோம்!**
**மக்களுக்கான தீர்மானங்களை நிறைவேற்றுவோம்!**
**நமது அரசியல் நிலைப்பாட்டை அறைகூவி பறைசாற்றுவோம்!**

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi, Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.